நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வறட்சிப் பகுதிகளை பார்வையிட்ட மத்தியக் குழு இன்று முதல்வருடன் சந்திப்பு**

தமிழகத்தில் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து வறட்சிப் பாதித்த மாவட்டங்களைப் பார்வையிட்ட மத்தியக் குழுவினர், முதல்வர் ஜெயலலிதாவை தலைமைச் செயலகத்தில் இன்று காலை சந்தித்துப் பேசுகின்றனர்.

தமிழகத்தில் வறட்சிப் பாதித்த மாவட்டங்களில் கடந்த இரண்டு நாள்களாக மத்திய குழுவினர் ஆய்வு செய்து வந்தனர். டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் அவர்கள் ஆய்வு நடத்தினர்.

இந்த நிலையில் புதன்கிழமை இரவு சென்னை திரும்பிய மத்தியக் குழுவினர், தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை வியாழக்கிழமை காலை சந்திக்கின்றனர். இந்தச் சந்திப்பின்போது மத்தியக் குழுவினரிடம் தமிழக வறட்சி நிலவரங்களை முதல்வர் ஜெயலலிதா விளக்குவார் எனத் தெரிகிறது.

இதன்பின் மத்தியக் குழுவினர் தில்லி புறப்பட்டுச் செல்கின்றனர். அந்தக் குழுவினர் ஓரிரு வாரங்களில் மத்திய அரசிடம் தனது அறிக்கையை அளிப்பார்கள் எனத் தெரிகிறது.

பேரிடர் நிவாரணத்துக்கென மத்திய உள்துறை அமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவிடம் மத்தியக் குழுவினர் தங்கள் அறிக்கையை அளிப்பார்கள். இதைத் தொடர்ந்து உள்துறை அமைச்சர் தலைமையிலான குழு அளிக்கும் பரிந்துரைகளை ஏற்று தமிழகத்துக்கு தேவையான நிவாரண நிதியை மத்திய அரசு வழங்கும்.

**உயிர்ப்பன்மை பாதுகாப்பு பசுமையாக்கும் திட்டத்தில் அரச மரம், முள் இல்லா மூங்கில்களை வளர்க்க வலியுறுத்தல்**

தமிழக முதல்வர் அறிவித்துள்ள உயிர்ப்பன்மை பாதுகாப்பு பசுமையாக்கும் திட்டத்தில், அரச மரம் மற்றும் முள் இல்லா மூங்கில் வளர்க்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கத்தின் செயலர் ஏ.அசோகன் முதல்வருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் முதல்வர் மற்றும் தமிழக அரசுக்கு அனுப்பியுள்ள கடித விவரம்:

சட்டப்பேரவையில் விதி எண் 110-ன் கீழ், தமிழக வருவாய்க் கிராமங்களில் உயிர்ப்பன்மை பாதுகாப்பு பசுமையாக்கும் திட்டம் மற்றும் 13-வது நிதிக்குழு மானியத் தொகை ரூ.142.48 கோடியை பயன்படுத்துவது தொடர்பான அறிவிப்பை முதல்வர் ஜெயலலிதா மே 2ஆம் தேதி வெளியிட்டுள்ளார்.

இத்திட்டத்தில் 2 கோடி மரங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பசுமைத் திட்டத்தைப் பெருக்க முதல்வர் முயற்சி மேற்கொண்டுள்ளதை சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் வரவேற்கிறது.

இத்திட்டத்தில் அரசமரம் மற்றும் முள் இல்லா மூங்கில் வளர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உலகில் அரசமரம், மூங்கில் மற்றும் துளசி ஆகியன மட்டுமே 24 மணி நேரமும் பிராண

வாயுவை (ஆக்சிஜன்) வெளியிடும் தாவரங்களாக கண்டறியப்பட்டுள்ளன. இவை தற்போதைய வெப்பமயமாதலை தடுக்க ஏற்றவையாக கருதப்படுகின்றன.

அரசமரம் அதிக நீரை உறிஞ்சுவதில்லை. அதிக வறட்சியை தாங்கும் சக்தி படைத்தது. முள் இல்லா மூங்கில் பண மதிப்புள்ள தாவரம். 5 ஆண்டுகளில் முழு வளர்ச்சி பெற்று வெப்பமயமாதலை தடுப்பதுடன் கைவினை தொழிலுக்கு உதவும் வகையிலும் இதை பயன்படுத்த முடியும்.

எனவே அரசு இரு தாவரங்களையும் தமிழக வருவாய் கிராமங்களில் தரிசு நிலப் பயிராகவும், ஊடு பயிராகவும், ஏரிக்கரைகள், கண்மாய் ஓரங்களில் மண் அரிப்பை தடுக்கவும் பயன்படுத்தலாம் என கூறியுள்ளார் அசோகன்.

**விவசாயிகள் மாநாட்டில் ஆட்சியர் நலத்திட்ட உதவி**

கலசப்பாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை முதல் 3 நாள்கள் நடைபெற்ற ஜமாபந்தி கூட்டத்தின் நிறைவாக புதன்கிழமை நடைபெற்ற விவசாயிகள் மாநாட்டில் மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

கலசப்பாக்கம், கேட்டவரம்பாளையம், கடலாடி பிர்காக்களுக்கான ஜமாபந்தி கூட்டம், கலசப்பாக்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை தொடங்கி புதன்கிழமை வரை 3 நாள்கள் நடைபெற்றது. அதன் நிறைவு விழா மற்றும் விவசாயிகள் மாநாடு புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே பேசும் போது, இந்த ஜமாபந்தியில் பல்வேறு உதவிகள் கேட்டு ஏராளமானோர் மனு அளித்தனர். அவற்றில் சில நிராகரிக்கப்பட்டுள்ளன. அதற்கான விளக்கமும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. தகுதியானவர்களுக்கு அரசின் உதவி நிச்சயம் கிடைக்கும். இக்கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கு வரும் 16.5.2013ஆம் தேதிக்குள் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என்றார்.

நிகழ்ச்சியில், 89 பேருக்கு பல்வேறு உதவித்தொகைகள், 7 பேருக்கு பட்டா மாற்றம், 21 பேருக்கு வேளாண் உதவிகளை ஆட்சியர் வழங்கினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் சுந்தரம், வட்டாட்சியர் கோபால், சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் மூர்த்தி, வட்ட வழங்கல் அலுவலர் தாமோதரன், ஒன்றியக் குழுத் தலைவர் ஜெயராமன், ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

**வன விலங்குகளைத் தடுக்காத சூரிய மின் வேலிகள்: அச்சத்தின் பிடியில் ரப்பர் தொழிலாளர்கள்**

கன்னியாகுமரி மாவட்ட வனப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சூரிய மின் வேலிகள் செயலற்ற நிலையில் உள்ளதால், வன விலங்குகள் தடையின்றி வந்து பொதுமக்களைத் தாக்கும் அபாயம் அதிகரித்துள்ளது. ரப்பர் தொழிலாளர்களும் அச்சத்தின் பிடியில் சிக்கித் தவிக்கின்றனர்.

இம் மாவட்டத்தில் வனப்பகுதியையொட்டிய சுமார் 5 ஆயிரம் ஹெக்டேர் பகுதியில் அரசு ரப்பர் கழகம் உள்ளது.

மயிலாறு, கோதையாறு, கல்லாறு, குற்றியாறு, மணலோடை, காளிகேசம், கீரிப்பாறை, பரளியாறு என கோட்டங்கள் மற்றும் உள்கோட்டங்கள் கொண்ட ரப்பர் கழகத்தில் கல்லாறு, குற்றியாறு, காளிகேசம், பரளியாறு உள்ளிட்டப் பகுதிகள் காட்டு யானைகள் அதிகம் உள்புகும் பகுதிகளாகும்.

இப் பகுதிகளில் யானைகள், பன்றிகள், கரடிகள் புகுந்து ரப்பர் கழக ரப்பர் தோட்டத்தில் களப்பணி மற்றும் பால் வடிப்புப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தொழிலாளர்களைத் தாக்கி உயிரிழக்க வைக்கும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன.

இது தவிர வனத்திலிருந்து வெளியேறும் பன்றி மற்றும் குரங்குகள் வனப்பகுதிகளை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் புகுந்து நாசம் செய்கின்றன.

வன விலங்குகள் தங்களைத் தாக்குவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென ரப்பர் தொழிலாளர்களும், மலையடிவார விவசாயிகளும் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து கோதையாறு முதல் ஆரல்வாய் மொழி திடல் ஊராட்சிப் பகுதி வரை சுமார் ரூ.15 கோடி மதிப்பீட்டில் வனப்பகுதியையொட்டி சூரிய மின் வேலி அமைக்கப்பட்டது. இந்த வேலிகள் யானைகள் நடமாட்டம் உள்ளப் பகுதிகளில் உறுதியாக அமைக்கப்பட்டது.

ஆனால், இந்த சூரிய மின் வேலிகள் உரிய முறையில் பராமரிக்கப்படாததால் குறுகிய காலத்திலேயே செயல் இழந்து விட்டதாக ரப்பர் கழகத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கூறுகின்றனர். இதனால் பல கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்ட சூரிய மின் வேலிகள் உரிய பலனை அளிக்காமல் வெறும் காட்சிப்பொருளாக மாறியுள்ளன.

வனத் துறை சார்பில் யானைகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும் பணியை செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள வனக் காவலர்கள் பிரிவு இப்போது செயல்படவில்லையெனவும் கூறப்படுகிறது. யானைகள் வனத்தைவிட்டு வெளியேறாத வகையில் அமைக்கப்பட்டுள்ள அகழிகளும் உரிய பலனை அளிக்கவில்லையென கூறப்படுகிறது.

6 யானைகள் நடமாட்டம்: கீரிப்பாறை, காளிகேசம் பகுதியில் இப்போது 6 யானைகள் நடமாடுவதாக தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். யானைகளின் அச்சுறுத்தலுக்கு இடையேயும் பணிக்குச் செல்ல வேண்டிய கட்டாயச் சூழலில் உள்ளதாக ரப்பர் தொழிலாளர்கள் கலங்கி வருகின்றனர்.

சூரியமின் வேலிகளைப் பராமரிக்க வேண்டும்: இதுகுறித்து ரப்பர் வாரிய துணைத் தலைவர் சி. அனந்தகிருஷ்ணன், சிஐடியூ தோட்டம் தொழிலாளர் சங்கப் பொதுச் செயலர் எம். வல்சகுமார் ஆகியோர் கூறியதாவது:யானைகள், காட்டுப் பன்றி உள்ளிட்டவைகளால் ரப்பர் கழகத் தொழிலாளர்கள் உயிரிழப்பது தொடர் சம்பவமாக உள்ளது. ரப்பர் கழகப் பகுதிகளில் யானைகள் உள்ளிட்ட வன விலங்குகள் புகுவது முற்றிலுமாகத் தடுக்கப்பட வேண்டும்.இதற்கு தேவையான நவீன தொழில் நுட்பத்தை ரப்பர் கழகமும், வனத் துறையும் பயன்படுத்த வேண்டும். யானைகளின் நடமாட்டத்தை கண்காணிக்கும் குழுவை நிரந்தரமாக பணியில் அமர்த்த வேண்டும்.

யானைகள் ரப்பர் கழகப் பகுதியில் நுழையாதவாறு அமைக்கப்பட்டுள்ள சூரிய வேலிகள் உரிய காலங்களில் பராமரிக்கப்படவில்லை. இவற்றில் வைக்கப்பட்டுள்ள மின் கலங்கள் செயலற்றுப் போயுள்ளன. மேலும், மின் கம்பிகளில் செடி-கொடிகள் படர்ந்துள்ளன.

சூரிய மின் வேலிகள் காட்சிப்பொருளாக மாறியுள்ளன.இவற்றை உரிய காலங்களில் பராமரிக்க வேண்டும். அவற்றிற்கு உயிரூட்ட வேண்டும் என்ற கோரிக்கைகளை வனத் துறை

புறக்கணிக்கிறது. மேலும், அண்மையில் யானை தாக்கி உயிரிழந்த பெண் தொழிலாளியின் குடும்பத்திற்கு ரூ. 10 லட்சம் நிவாரண உதவியை தமிழக அரசு வழங்க வேண்டும் என்றனர்.

**குலசேகரத்தில் சூறைக்காற்று: 20 ஆயிரம் வாழைகள் சேதம்**

கன்னியாகுமரி மாவட்டம், குலசேகரம் பகுதியில் திங்கள்கிழமை வீசிய திடீர் சூறைக் காற்றில் 20 ஆயிரத்திற்கும் அதிகமான வாழைகள் சாய்ந்தன.

இம் மாவட்டத்தில் திங்கள்கிழமை பிற்பகலில் இடிமின்னலுடன் பலத்த மழை பெய்தது. பலத்த சூறைக்காற்றும் வீசியதால் பெரும்பாலான பகுதிகளில் மரங்கள் முறிந்தன. குலை தள்ளிய மற்றும் தள்ளும் பருவத்தில் இருந்த ஏராளமான வாழைகளும் சாய்ந்தன.

தும்பகோடு வருவாய் கிராமத்தில் உண்ணியூர்கோணம், அச்சாளீஸ்வரம், கோட்டூர் கோணம், திற்பரப்பு வருவாய் கிராமத்தில் சேக்கல், காரூர், நந்திமங்கலம், சித்திரக்காலை, களியல் வருவாய் கிராமத்தில் கடையல், செங்குழிக்கரை, காட்டாவிளை, ஆலஞ்சோலை, பேணு, பேச்சிப்பாறை வருவாய்கிராமத்தில் வெட்டிமுறிச்சான், அஞ்சுகண்டறை, காக்கச்சல், சேனம்கோடு, வேட்டி, பொன்மனை வருவாய் கிராமத்தில் அக்கம்விளை, மங்கலம், குறுமாத்தூர், செறுதிக்கோணம், ஈஞ்சக்கோடு உள்ளிட்ட இடங்களில் நூற்றுக்கணக்கான விவசாயிகளின் 20 ஆயிரத்திற்கும் அதிகமான வாழைகள் சாய்ந்துள்ளன. அஞ்சுகண்டறை பகுதியில் மட்டும் ஒரு விவசாயிக்கு 2500 வாழைகள் சாய்ந்தன.இதனால் விவசாயிகள் பெரும் சோகத்துக்கு ஆளாகியுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். ஆண்டுதோறும் தொடரும் சோகம்: இப் பகுதிகளில் கடந்த ஆண்டும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இதுபோன்ற காற்றினால் ஆயிரக்கணக்கான வாழைகள் சேதமாகின. ஒவ்வொரு ஆண்டும் இது போன்ற சம்பவம் நிகழ்வதால் வாழை விவசாயிகள் தொடர் சோகத்தை சந்தித்து வருகின்றனர். இதுகுறித்து திற்பரப்பு கிராம நிர்வாக அலுவலர் பால்ராஜ் கூறியதாவது: திற்பரப்பு பகுதியில் அண்மையில் வீசிய காற்றில் ஏராளமானவாழைகள் சாய்ந்துள்ளன. இதுகுறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றார். இதுகுறித்து திருவட்டாறு வட்டார விவசாயிகள் சங்கச் செயலர் சதீஸ் கூறியதாவது: இப் பகுதிகளில் வீசிய சூறைக்காற்றில் 20 ஆயிரத்திற்கும் அதிகமான வாழைகள் சேதமாகியுள்ளன. இதில் பெரும்பாலான வாழைகள் நேந்திரன் மற்றும் செவ்வாழை ரகங்களாகும். வாழைகளை நடவு செய்திருந்தவர்களில் பெரும்பகுதியினர் குத்தகை விவசாயிகளாவர். இப்போது வாழை கன்றின் விலை, குத்தகை தொகை, உர விலை, தொழிலாளர்களுக்கான கூலி ஆகியவை பல மடங்கு உயர்ந்துள்ள நிலையில், விவசாயிகளுக்கு பெருமளவு இழப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டும் இதே போல் காற்றினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். கடந்த ஆண்டு பாதிக்கப்பட்ட சில விவசாயிகளுக்கு வாழை ஒன்றிற்கு ரூ. 7 என்ற அளவில் மட்டுமே இழப்பீடு அறிவிக்கப்பட்டது. இதனால் பெரும்பாலான விவசாயிகள் இழப்பீட்டை ஏற்க மறுத்தனர். எனவே, நிகழாண்டில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வாழை ஒன்றிற்கு குறைந்த பட்சம் ரூ. 50 இழப்பீடு வழங்க வேண்டும். இது குறித்து வருவாய்த் துறையினருக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது என்றார்.

**நெல்லை மாவட்டத்தை புறக்கணித்த மத்திய குழு: விவசாயிகள் ஏமாற்றம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளைப் பார்வையிடாமல் மத்தியக் குழுவினர் புறக்கணித்தது இங்குள்ள விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சி பாதிப்புகளைப் பார்வையிட கடந்த மாதம் 11-ம் தேதி நிதியமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் தலைமையிலான உயர்நிலைக் குழுவினர் வந்திருந்தனர். இக் குழுவினர் உண்மையிலேயே வறட்சிக்கு இலக்கான பகுதிகளுக்குச் செல்லவில்லை என்ற குறை விவசாயிகள் மத்தியில் நிலவுகிறது. இம் மாவட்டத்தில் 16 ஆயிரத்து 965.5 ஹெக்டேரில் நெல் உள்ளிட்ட பயிர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக இந்த உயர்நிலைக் குழுவிடம் மாவட்ட ஆட்சியர் சி. சமயமூர்த்தி அறிக்கை அளித்திருந்தார். மொத்தமாக மாவட்டத்தில் 38 ஆயிரத்து 246 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெற்பயிரில் 3 ஆயிரத்து 563.74 ஹெக்டேர் பரப்புக்கு பாதிக்கப்பட்டுள்ளது. பாதிப்பு சதவிகிதம்- 9.31. இதுபோல 35 ஆயிரத்து 432 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த இதர பயிர்கள் 13 ஆயிரத்து 401.76 ஹெக்டேர் பரப்பில் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிப்பு சதவிகிதம் 37.82. மொத்தமாக வறட்சியால் 16 ஆயிரத்து 965.5 ஹெக்டேரில் பயிர்கள் பாதிக்கப்பட்டதாக அந்த அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்குவதற்காக ரூ.14.87 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஆட்சியர் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். மாவட்டத்தில் 50 சதவிகிதத்துக்கு மேல் பயிர் சேதத்தால் பாதிக்கப்பட்ட 31 ஆயிரத்து 706 விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப் படவுள்ளது. அதன்படி 41 ஆயிரத்து 904.82 ஏக்கர் பாதிக்கப் பட்டமைக்கு நெல் பாதிப்புக்கு ரூ.4.40 கோடியும், இதர பயிர்களுக்கு ரூ.10.47 கோடியும் என்று மொத்தமாக ரூ.14.87 கோடியை நிவாரணத் தொகையாக வழங்க அரசு அனுமதி அளித்து ஆணையிட்டுள்ளது என்று அவர் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்த நிவாரணம் யானை பசிக்கு சோளப்பொரி போன்று உள்ளதாக விவசாயப் பிரதிநிதிகள் தெரிவிக்கிறார்கள். வறட்சி பாதிப்பு என்று மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு அரசுக்கு அனுப்பியுள்ள கணக்கீடுகள் வெறும் கண்துடைப்பாகவே இருக்கிறது என்றும், பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளிலும் உண்மையாகவே கணக்கீடுகள் நடத்தப்படவில்லை என்றும் மாநில விவசாய சங்க இணைச் செயலர் பெரும்படையார் தெரிவித்தார். உண்மையாகவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இந்த நிவாரணம் சென்று சேரப் போவதில்லை. பண்ணை விவசாயம் மேற்கொள்பவர்களுக்கு இத் தொகை கிடைக்கும். கடந்த ஓராண்டாகவே மாவட்டம் முழுக்க வறட்சியால் பாதிக்கப்பட்டு அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 31 ஆயிரம் பேருக்கு மட்டுமே நிவாரணம் என்று அறிவித்திருப்பது கண்துடைப்பு.

இந்நிலையில் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களுக்கு மத்தியக் குழு சென்றுள்ள நிலையில் திருநெல்வேலி மாவட் டத்துக்கு அக்குழு வராதது விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. இதனால் இம்மாவட்டத்தில் விவசாயத்தின் உண்மை நிலவரத்தை அவர்கள் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படாமல் போனது. இதனால் உரிய நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை விவசாயிகள் இழந்திருக்கிறார்கள் என்றார் அவர். இது தொடர்பாக தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருநெல்வேலி மாவட்டச் செயலர் ஆர். கசமுத்து கூறியதாவது:

தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களுக்கு அடுத்ததாக கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டது திருநெல்வேலி மாவட்டம். கடந்த ஓராண்டில் இருபோக விளைச்சலும் இல்லாமல் வயல்கள் தரிசாகவேக் காட்சியளிக்கின்றன. இந்த உண்மை நிலவரத்தை மாநில குழுவினரும் முறையாகப் பார்வையிடவில்லை. தற்போது மத்தியக் குழுவினரும் பார்வையிடவில்லை. எனவே மத்தியக் குழுவினர் இங்கு வறட்சி நிலவரத்தைப் பார்வையிட வர வேண்டும். கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய விவசாயக் கடன்கள் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றார் அவர். திருநெல்வேலி உள்பட தமிழகத்தில் 31 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக தமிழக அரசு அறிவித்திருக்கிறது. இதில் பாதிப்பு அதிகமுள்ள திருநெல்வேலி மாவட்டத்துக்கு மத்திய குழு வராதது விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது.

**சூரியசக்தி பம்பு செட்டுகளுக்கு மானியம்: ஆட்சியர்**

சூரியசக்தி மூலம் இயங்கும் பம்பு செட்டுகளுக்கு மானியம் வழங்கப்படவுள்ளதாக, ஆட்சியர் சி. சமயமூர்த்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மின் பற்றாக்குறையைச் சமாளிக்கும் வகையில் சூரியசக்தி மூலம் இயங்கும் பம்பு செட்டுகளுக்கு தமிழக அரசு மானியம் அறிவித்துள்ளது. அதன்படி இம் மாவட்டத்துக்கு இதர விவசாயிகளுக்கு 8, ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 2 என மொத்தம் 10 பம்பு செட்டுகள் மானியத்தில் வழங்க ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

ஒரு பம்புசெட்டின் விலை தோராயமாக ரூ. 4 லட்சம். இதில் விவசாயிகளின் பங்குத்தொகை ரூ. 80 ஆயிரம். மீதமுள்ள ரூ. 3.2 லட்சம் மானியமாக வழங்கப்படும். தேவைப்படும் விவசாயிகள் விண்ணப்பத்தை உரிய ஆவணங்களுடன் ரூ. 10 ஆயிரத்துக்கு சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெயரில் வங்கி வரைவோலை எடுத்து, அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் கொடுத்து முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். முன்பணம் ரூ. 10 ஆயிரம் பம்புசெட் வழங்கும்போது விவசாயிகள் செலுத்த வேண்டிய பங்குத்தொகையில் சரிசெய்யப்படும். குறைந்த எண்ணம் இலக்கு பெறப்பட்டுள்ளதால் முன்னுரிமை அடிப்படையில் பம்புசெட்டுகள் விநியோகிக்கப்படும். மேலும் விவரங்களுக்கு சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களையோ, மாவட்ட வேளாண்மை அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

தினமலர்

**அரிசி ஏற்றுமதியில் இந்தியாமீண்டும் சாதனை படைக்கும்**



புதுடில்லி:நடப்பு ஆண்டில், இந்தியாவின் அரிசி ஏற்றுமதி, 83 லட்சம் டன்னாக இருக்கும் என, உணவு மற்றும் வேளாண் அமைப்பு (எப்.ஏ.ஓ.,) தெரிவித்துள்ளது.கடந்த இரண்டு ஆண்டுகளாக, அரிசி ஏற்றுமதியில், இந்தியா முன்னிலை வகிக்கிறது. **தாய்லாந்து** :இதற்கு எடுத்துக்காட்டாக, கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சென்ற ஆண்டு, இந்தியா, தாய்லாந்தை பின்னுக்கு தள்ளி, 1.03 கோடி டன் அரிசியை ஏற்றுமதி செய்துள்ளது.கடந்த ஆண்டு தாய்லாந்து நாட்டின் அரிசி ஏற்றுமதி, 70 லட்சம் டன் என்ற அளவில் தான் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.நடப்பு ஆண்டிலும், அரிசி ஏற்றுமதியில் இந்தியாவே முதலிடம் வகிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.இவ்வாண்டில், வியட்நாம் நாட்டின் அரிசி ஏற்றுமதி, 78 லட்சம் டன் என்ற அளவிலும், தாய்லாந்தின் ஏற்றுமதி, 77 லட்சம் டன் என்ற அளவிலும் தான் இருக்கும் என, எப்.ஏ.ஓ., மதிப்பீடு செய்துள்ளது.நடப்பு 2013ம் ஆண்டில், ஆசிய நாடுகளின் அரிசி உற்பத்தி, 45.20 கோடி டன்னாக இருக்கும் என, எப்.ஏ.ஓ., அமைப்பின், அரிசி குறித்த கண்காணிப்பு பிரிவு மதிப்பிட்டுள்ளது.பல ஆசிய நாடுகளில், நெல் சாகுபடிக்கு உகந்த தட்ப வெப்பநிலை நிலவி வருகிறது.

**ஆதரவு விலை** :மேலும், இந்தியா மற்றும் தாய்லாந்து நாட்டு அரசுகள், நெல் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், குறைந்த பட்ச ஆதரவு விலையை உயர்த்தி வருகின்றன.இது போன்றவையும், ஆசிய நாடுகளின் நெல் உற்பத்தி அதிகரிப்புக்கு முக்கிய காரணம் என, எப்.ஏ.ஓ., தெரிவித்துள்ளது.

முந்திரி ஏற்றுமதி ரூ.4,046 கோடி



கொச்சி:கடந்த 2012-13ம் நிதியாண்டில், நாட்டின் முந்திரி ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 4,046 கோடியாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய 2011-12ம் நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை (4,390 கோடி ரூபாய்) விட, 8 சதவீதம் குறைவு என, இந்திய முந்திரி ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சிலின் தலைவர் ஹரி கிருஷ்ணன் ஆர்.நாயர் தெரிவித்தார். **ஐரோப்பா :**கணக்கீட்டு நிதியாண்டில், முந்திரி ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 8 சதவீதம் குறைந்துள்ளது என்றாலும், அளவின் அடிப்படையில், 21 சதவீதம் குறைந்து, 1,03,645 டன்னாக சரிவடைந்துள்ளது.ஐரோப்பிய நாடுகளில், முந்திரிக்கான தேவை குறைந்ததை அடுத்தும், முந்திரி கொட்டையின் விலை உயர்ந்ததையடுத்தும், ஒட்டு மொத்த அளவில், முந்திரி ஏற்றுமதி வளர்ச்சி குறைந்து உள்ளது.

சென்ற நிதியாண்டில், பல மாதங்களில், முந்திரியின் விலை, உயர்ந்திருந்ததால், மதிப்பின் அடிப்படையிலான ஏற்றுமதி சரிவு நிலை சற்று குறைந்திருந்தது.ஐரோப்பிய நாடுகளில், ஏற்பட்டுள்ள பொருளாதார மந்த நிலையால், இந்திய முந்திரிக்கு தேவை குறைந்திருந்தது. இருப்பினும், அமெரிக்காவிற்கான, இதன் ஏற்றுமதி அதிகரித்திருந்தது. நமக்கு போட்டி நாடான வியட்நாம் நாட்டின், முந்திரி ஏற்றுமதி குறைந்திருந்ததும், நமக்கு சாதகமாக அமைந்திருந்தது என, நாயர் மேலும் குறிப்பிட்டார். **இறக்குமதி:**உள்நாட்டில் போதிய அளவிற்கு, முந்திரி கொட்டைகள் கிடைக்காததால், இந்தியா, இதனை அதிகளவில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, பதப்படுத்தி மறு ஏற்றுமதி செய்து வருகிறது.கடந்த ஆண்டு ஆப்ரிக்காவில், ஒரு டன் முந்திரி கொட்டையின் விலை, 1,050-1,100 டாலர் என்ற அளவில் மிகவும் அதிகரித்திருந்தது. தற்போது, இதன் விலை, 800-900 டாலராக சரிவடைந்துள்ளது.

**முட்டை விலை 265 காசாக நிர்ணயம்**



நாமக்கல்:தமிழகம், கேரளாவில், முட்டைவிலை, 265 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள் ளது. இரு தினங்களில், முட்டை விலை, ஐந்து காசு ஏற்றம் கண்டுள்ளது. நாமக்கல்லில், நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டையின் விலையை 262 லிருந்து, மூன்று காசு உயர்த்தி, 265 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாமக்கல் பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 55 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடம் கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 66 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்க மாற்று பயிராக மக்காச்சோள சாகுபடி**

சுங்குவார்சத்திரம்:தண்ணீர் தட்டுப்பாட்டை சமாளிக்க, மக்காச்சோளம் சாகுபடியில் பட்டதாரி வாலிபர் ஒருவர் இறங்கி உள்ளார்.இதுகுறித்து, பட்டுமுடையார்குப்பத்தைச் சேர்ந்த விவசாயி மனோகரன் கூறியதாவது:ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம், பிச்சிவாக்கம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் தோட்டக்கலை பயிர்கள் அதிகமாக பயிரிடப்படுகின்றன. பட்டு முடையார்குப்பத்தில் உள்ள, எனக்கு சொந்தமான நிலத்தில், மக்காச்சோளம் பயிரிட்டுள்ளேன். உரமிடுதல் நன்கு உழுத நிலத்தில், இரண்டு அடி இடைவெளியில், கரை அமைக்க வேண்டும். இதில், மக்காச்சோளம் விதையை ஒரு அடி இடைவெளியில், நடவேண்டும். பின், தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தொடர்ந்து மூன்றாம் நாள் தண்ணீர் விடவேண்டும்.தொடர்ந்து, 5ம் நாள் செடி முளைத்து விடும். பின்னர் 25ம் நாள், 45ம் நாள், 60ம் நாள் என, மூன்று முறை மேல் உரமாக பொட்டாஷ், யூரியாவை இடவேண்டும். களைக்கொல்லி தெளித்தால் களை அதிகமாக வராது. 100வது நாளில் அறுவடை செய்யலாம்.ஒரு ஹெக்டேரில் மக்காச்சோளம் பயிரிட, 25 ஆயிரம் ரூபாய் செலவாகும். ஒரு ஹெக்டேருக்கு, ஏழு முதல் ஏழரை டன் மகசூல் கிடைக்கும். தண்ணீர் தேவை குறைவுஒரு டன் 14,500 ரூபாய் விலைக்கு, தேசிய கால்நடை உணவு உற்பத்தி மையம், நேரிடையாகவே விவசாயிகளிடம் பெற்றுக் கொள்கின்றது. இதனால், விற்பனை எளிதாக உள்ளது.நெல்லுக்கு மாற்று பயிரான மக்காச்சோளம் சாகுபடிக்கு குறைவான தண்ணீர், குறைந்த செலவு, குறைந்த ஊழியர்கள் இருந்தால் போதும். ஒரு ஏக்கர் நெல் பயிரிட தேவையான

தண்ணீரை கொண்டு, 3 ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிடலாம்.இவ்வாறு மனோகரன் கூறினார்.விவசாயத்தில் ஆர்வம் கொண்ட மனோகரன், காட்டுப்பாக்கம், வேளாண் அறிவியல் மையத்தில், மக்காச்சோளம் பயிரிட தேவையான பயிற்சியை பெற்று உள்ளார். மேலும், கோவை வேளாண் பல்கலைகழக, அஞ்சல் வழிக்கல்வி மூலம், பண்ணை வேளாண்மை குறித்தும் பட்டப்படிப்பு படித்து வருகிறார்.

### திருக்கோவிலூர் நகரில் பூக்கள் விலை... திடீர் வீழ்ச்சி ஒரு வார காலமாக படிப்படியாக சரிந்தது

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் மார்க்கெட்டில் பூக்கள் விலை வீழ்ச்சியடைந்ததால், வியாபாரிகள் கவலையடைந்துள்ளனர். பெண்கள் மகிழ்ச்சியுடன் பூக்களை வாங்கிச் சென்றனர்.
ஜனவரியில் துவங்கி மார்ச் மாத இறுதிவரை பூக்களின் விலை விண்ணை தொட்டது. ஒரு கிலோ குண்டுமல்லி 300 ரூபாய், மல்லி 500 ரூபாய் என விற்கப்பட்டது. அதிகபட்சமான இந்த விலையால் வியாபாரிகளும், பூ பயிர் செய்த விவசாயிகளும் மகிழ்ச்சியடைந்தனர்.
கடந்த ஒரு வார காலமாக பூக்களின் விலை அதலபாதாளத்திற்கு சென்றுள்ளது.
திருக்கோவிலூரை சுற்றியுள்ள ஆலம்பாடி, கொடியூர், விளந்தை உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் பூக்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.
இவை திருக்கோவிலூர் மார்க்கெட்டிற்கு கொண்டு வரும்போது, திருவண்ணாமலை பூ மார்க்கெட் நிலவரத்தை வைத்தே விலை நிர்ணயம் செய்யப் படுகிறது. நேற்று முன்தினம் ஒரு கிலோ குண்டுமல்லி 20 ரூபாய், மல்லி 30 ரூபாய், கனகாம்பரம் 60 ரூபாய் என மொத்த விற்பனையாளர்களுக்கு விற்கப்பட்டது. நேற்று ஒரு கிலோவிற்கு 10 ரூபாய் உயர்ந்து காணப்பட்டது. இருந்தாலும் மாலை நேரத்தில் திடீரென விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இந்நிலையில் சில்லரை விற்பனையில் குண்டுமல்லி ஒரு கிலோ 60 ரூபாய், மல்லி 80 ரூபாய், கனகாம்பரம் 100 ரூபாய் என விற்கப்பட்டது.
விலை சரிந்ததால் பெண்கள் மிகுந்த ஆர்வத்துடன் பூக்களை வாங்கிச் சென்றனர். விலை குறைவிற்கு காரணம், போதுமான மழை இல்லாதபோதும், நிலத்தடி நீரைக் கொண்டு பயிர் செய்யப்பட்டுள்ள பூச்செடிகள் செழித்து வளர்ந்துள்ளது. இதனால் அதிகளவில் பூக்கள் வரத்து இருந்ததால் விலை குறைந்துள்ளது. பூ விலை வீழ்ச்சியடைந்தது பெண்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தினாலும், வியாபாரிகள் அதிக வரத்து உள்ள அனைத்து பூவையும் விற்க முடியாமல் நஷ்டத்தை சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதேபோல் விவசாயிகள் தரப்பில் விலை சரிவால் மிகப்பெரிய அளவில் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

### முறைகேடாக மின்சாரம் பயன்படுத்துவதால் பல ஏக்கர் கரும்பு பயிர் காய்ந்து நஷ்டம்

உளுந்தூர்பேட்டை:கோடை மழை பொய்த்து வரும் நிலையில், முறைகேடாக மின்சாரம் பயன்படுத்துபவர்களால் உளுந்தூர்பேட்டை அருகே பல 100 ஏக்கரில் பயிரிட்டுள்ள கரும்பு காய்ந்து விவசாயிகளை கண்ணீர் விட வைத்துள்ளது. உளுந்தூர்பேட்டை தாலுகா பகுதியில்

அதிகளவு விவசாயிகள் மிகுந்த பகுதியாகும். தற்போது கோடை மழை பொய்த்ததாலும், மின் வெட்டாலும் விவசாய பயிர்களின் நிலை கேள்வி குறியாகி வருகிறது. அதே நேரத்தில் கிடைக்கின்ற மின்சாரத்தை கொண்டு விவசாயிகள் பாசன வசதியை செய்கின்றனர். திருநாவலூர் ஒன்றியம் சேந்தநாடு மின்வாரிய பகுதிகளில் உள்ள ஆண்டிகுழி,சேந்தநாடு உட்பட பல ஊராட்சிகளில் மின்சாரம் முறைகேடாக பயன்படுத்தப்படுகிறது. இரு முனை மின் விநியோகத்தின் போது மின் மோட்டார்கள் இயங்காது. அந்த நேரத்தில் அதிக திறனுள்ள (20 எச்.பி.,எனும் குதிரை திறன்) கெபாசிட்டரை பயன்படுத்தி மின்சாரத்தை எடுக்கின்றனர். இதனால் மும்முனை விநியோகத்தின் போது, சாதாரண மின் மோட்டார்கள் வைத்துள்ளவர்களுக்கு விவசாய பாசனத்திற்கு பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. அதை மீறி இயங்கினால் மின்மோட்டார் பழுதடைந்து நஷ்டத்தை சந்திக்கின்றனர். இதனால் அப்பகுதியிலுள்ள பல ஏக்கர் கரும்பு பயிர்கள் காய்ந்து விவசாயிகளை கவலையடைய செய்துள்ளது. பயிர்கள் காய்வது ஒரு புறமிருக்க முறைகேடாக மின்சாரம் பயன்படுத்துபவர்களால் மின் மோட்டார்கள் பழுதாவது விவசாயிகளை கண்ணீர் விட வைத்துள்ளது. விவசாயிகள் பல முறை மின்வாரிய அதிகாரிகளிடம் முறையிட்டும் பலனில்லை. இதனால் நஷ்டமடைந்த விவசாயிகள் வாழ்வதாரம் பாதித்துள்ளதாக குமுறுகின்றனர். சேந்தநாடு மின்வாரிய அதிகாரி சகாயராஜிடம் கேட்ட போது, முறைகேடாக மின்சாரத்தை பயன்படுத்தியுள்ளது தெரியவந்துள்ளது. இதனால் அதிக மின்சாரத்தை எடுக்கும் கெபாசிட்டரை மின்மோட்டாரில் இருந்து அகற்ற உத்தரவிட்டுள்ளேன். அதிகாரிகளின் அறிவுறுத்தலின்பேரில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**வாழைத்தார் விலை கடும் வீழ்ச்சி பயிரிட்ட விவசாயிகள் கவலை**

ப.வேலூர்: வெயில் காரணமாக, வரத்து அதிகரித்ததால், வாழைத்தார், வரலாறு காணாத வகையில், விலை வீழ்ச்சி அடைந்தது. அதனால், பயிரிட்ட விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ப.வேலூர் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளான, பொத்தனூர், பாண்டமங்கலம், பொய்யேரி, நன்செய் இடையாறு, குப்புச்சிப்பாளையம், ஓலப்பாளையம், ப.வேலூர் உள்ளிட்ட காவிரிக்கரையோர பகுதிகளில், 3,000க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில், வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இங்கு, ரஸ்தாளி, கற்பூரவள்ளி, பச்சநாடன், மொந்தன் போன்ற ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளது. அறுவடை செய்யப்பட்ட வாழைத்தார்களை, ப.வேலூரில் நடக்கும் தினசரி மார்க்கெட் ஏலத்துக்கு, விவசாயிகள் கொண்டு வருகின்றனர். அவ்வாறு கொண்டு வரும் வாழைத்தார்களை, நாமக்கல், சேலம், ஈரோடு, கரூர், திண்டுக்கல் போன்ற பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள், போட்டி போட்டு எடுத்து, பல்வேறு பகுதிகளுக்கு, விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர். சீஸன் நேரத்தில், வாழைத்தார் விலை உயர்வதும், மற்ற காலங்களில், வீழ்ச்சி அடைவதும் வாடிக்கை. இந்நிலையில், தற்போது வெயில் வாட்டி எடுப்பதால், வாழைத்தார் வரத்து அதிகரித்துள்ளது. அதனால், கடந்த வாரத்தை விட, இந்த வாரம், வரலாறு காணாத அளவுக்கு

விலை வீழ்ச்சி அடைந்து, விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது. கடந்த வாரம், 230 ரூபாய்க்கு விற்பனையான பூவன்தார், இந்த வாரம், 100 ரூபாய்க்கு ஏலம் போனது. 200க்கு விற்பனையான ரஸ்தாளி, 120க்கும், 180க்கு விலைபோன பச்சநாடன் வாழைத்தார், 80 ரூபாய்க்கும் விற்பனையானது. அதேபோல், 180க்கு விலைபோன கற்பூரவள்ளி நேற்று, 100 ரூபாய்க்கு விற்பனையானது. மூன்று ரூபாய்க்கு விற்பனையான மொந்தன் வாழைக்காய், ஒரு ரூபாய்க்கு விலைபோனது. வெளியூர் வியாபாரிகள் பெரும்பாலானோர், நேற்று நடந்த ஏலத்தில் கலந்து கொள்ளாததால், வாழைத்தார் விலை வீழ்ச்சி அடைந்தது. வரலாறு காணாத இந்த விலை வீழ்ச்சியால், பயிரிட்ட விவசாயிகள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

**உழவர் பெருவிழா கொண்டாட்டம்**

மோகனூர்: மோகனூர் யூனியன், புதுப்பாளையம் பஞ்சாயத்து, குட்லாம்பாறை கிராமத்தில், உழவர் பெருவிழா கொண்டாடப்பட்டது. பஞ்சாயத்து தலைவர் வீராசாமி தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் விஜயராகவன் வரவேற்றார். தோட்டக்கலை உதவி இயக்குனர் அசோகன், தோட்டக்கலைத் துறை திட்டங்கள் பற்றியும், உதவி பொறியாளர் தங்கராஜூ, வேளாண் பொறியியல் துறையில் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள் குறித்தும் விளக்கினர். வேளாண் அலுவலர் ஹேமலதா, துணை வேளாண் அலுவலர் மணி ஆகியோர் செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தனர். பட்டு வளர்ச்சி, அறிவியல் வேளாண் நிலையம், ஆவின் நிறுவனம் ஆகியவற்றை சேர்ந்த அலுவலர்கள், தங்களது நிறுவனத்தில் திட்டம் குறித்து எடுத்துரைத்தனர். * அதேபோல், அணியாபுரத்தில், பாரம்பரியமிக்க வேளாண் பொருட்களின் மகத்துவம் மற்றும் மதிப்பை மக்களுக்கு சென்றடைய விழிப்புணர்வு பேரணி நடந்தது. அரசு மேல்நிலைப்பள்ளியில் துவங்கிய பேரணி, பகவதி அம்மன் கோவில் வரை சென்றது. பேரணியில், பாரம்பரிய வேளாண் பொருட்களின் மகத்துவம் குறித்து, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. ஏற்பாடுகளை, உதவி வேளாண் அலுவுலரகள் மோகன்ராஜ், பூங்கொடி ஆகியோர் செய்திருந்தனர்.

**இயற்கை உரம் மூலம் செவ்வாழை சாகுபடி 18 மாதத்தில் மகசூல்: ரூ.84 ஆயிரம் லாபம்**

சென்னிமலை: சென்னிமலை அருகே இயற்கை உரங்களை பயன்படுத்தி, 12 சென்ட் நிலத்தில், 18 மாதத்தில் செவ்வாழை மூலம், 84 ஆயிரம் லாபம் அடைந்ததாக, விவசாயி பெருமிதம் தெரிவித்தார்.

சென்னிமலை யூனியன் வரப்பாளையம் பஞ்சாயத்து புளியம்பாளையத்தில் வசிப்பவர் சீனிவாசன். இயற்கை உரங்கள், சொட்டு நீர் பாசன உதவியுடன், இவர் மாதுளை, மா, எலுமிச்சை என பயிரிட்டு, தற்போது செவ்வாழை சாகுபடி செய்து சாதனை படைத்துள்ளார். இவர், 12 சென்ட் நிலத்தில், 200 செவ்வாழை கன்றுகளை, கரூர் பகுதியில் இருந்து, கன்று ஒன்று,

பத்து ரூபாய்க்கு வாங்கி சாகுபடி செய்தார். கன்றுக்கு குழி தயார் செய்து, அதில் சாணி, தொழுஉரம், குப்பை இடுதல், என 2,000 ரூபாய் செலவு செய்தார். பின், வாழைகளுக்கு இடையில் சிறுதானியங்களான கம்பு, தட்டைப்பயிர், எள், உளுந்து, துவரை போன்ற பயிர் வகைகளை கலந்து விதைத்துள்ளார். மூன்று மாதம் இப்பயிர்கள் வளர்த்து, வாழைத்தோட்டத்தில் அவற்றை மடித்து, அவற்றை உரமாக்கினார். கூலியாள், தண்ணீர் பற்றாக்குறைக்காக, வாழைகளுக்கு சொட்டு நீர் பாசனத்துக்கு, 5,000 ரூபாய் செலவிட்டார். விவசாய பணிகளை இவரே செய்வதுடன், மூங்கிலால் முட்டுக்கொடுத்தல் உட்பட பல புதிய தொழில் நுட்பங்களை அறிமுகம் செய்து, மொத்தம், 16 ஆயிரம் செலவிட்டுள்ளார். இயற்கை உரங்களை மட்டும் நம்பி உள்ளதால், வாழைகளுக்கு கோழி எரு, ஆடு, மாட்டு சாணம், உயிரி உரகரைசலை சொட்டுநீர் மூலம் கொடுக்கிறார். காய்கள் பருமனாக மோர், எருக்கம்சாறு, மாட்டுசாணம், சிறுநீர் கலந்து தெளித்துள்ளார். தற்போது நல்ல விளைச்சல் கண்டு செவ்வாழை பழ தார்கள், குலை தள்ளி, பிரம்மாண்ட தாராக காணப்படுகிறது.
விற்பனை வாய்ப்புகள் அதிகரிப்பால், பெருந்துறை, விஜயமங்கலம், திருப்பூரில் அதிகம் வாங்கிச் செல்கின்றனர். ஒரு தாரில், 100 முதல், 130 காய்கள் வரை உள்ளதால், 500 முதல், 600 வரை விலை கிடைக்கிறது. 12 செண்ட் நிலத்தில், 200 வாழை சாகுபடி செய்த சீனிவாசன், வாழை மூலம் ஒரு லட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்ததால், 84 ஆயிரம் ரூபாய் லாபம் பெற்றுள்ளார். இன்னும், 30 நாட்களில் முழு அளவில் வாழைத்தார்கள் விற்பனையாகிவிடும். இயற்கை விவசாயத்தால் செய்யப்பட்ட இந்த செவ்வாழைக்கு நல்ல வரவேற்பு உள்ளதால், தற்போது, அரை ஏக்கரில் வாழை சாகுபடிக்கு திட்டமிட்டுள்ளார். இவர், நபார்டு வங்கி உதவியுடன், உழவர் மன்றம் துவங்கி, பல விவசாயிகளுக்கு இதுபோன்ற சாகுபடி முறைகள், புதிய தொழில் நுட்பங்களை கற்று தருகிறார்.

**உழவர் பெருவிழா**

தாராபுரம்: தாராபுரம் செலாம்பாளையத்தில் உழவர் பெருவிழாவில், பல்வேறு நலத்திட்ட உதவிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம் வழங்கினார். சினக்காம்பாளையம் பஞ்சாயத்து தலைவர் நாட்டுதுரை தலைமை வகித்தார். எம்.எல்.ஏ., பொன்னுச்சாமி, கூட்டுறவு வங்கி தலைவர் மனோகரன், யூனியன் தலைவர் ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தாராபுரம் வேளாண் உதவி இயக்குனர் வெங்கடாசலம் வரவேற்றார். உழவர் பெருவிழா கண்காட்சியை துவக்கி வைத்து, நலத்திட்ட உதவிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம் வழங்கினார். வேளாண்மை இணை இயக்குனர் ஜெயவேலு, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கிருஷ்ணகுமார், பட்டு வளர்ச்சித்துறை ஆய்வாளர் பீமராஜ், உழவர் சந்தை நிர்வாக அலுவலர் குமரகுருபகாங்கேயன் உட்பட பலர் பங்கேற்றனர். உதவி வேளாண் அலுவலர் பாரிவள்ளல் நன்றி கூறினார்.

**கெமிக்கல் மூலம் பழுத்த மாம்பழங்கள் கோபி பகுதியில் 400 கிலோ பறிமுதல்**

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதியில் உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள், கணக்கு காட்டுவதற்காக எத்திஃபார்ன் மூலம் பழுக்க வைக்கப்பட்ட, 400 கிலோ மாம்பழம், சில பாக்கெட் போலி டீத்தூள் பறிமுதல் செய்தனர். கோபி பகுதியில் பல இடங்களில் எத்திஃபார்ன் மூலம் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழம் விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறான மாம்பழத்தை சாப்பிடும் நபர்களுக்கு வாந்தி, மயக்கம், வயிற்று போக்கு உள்ளிட்ட நோய்கள் ஏற்படுகிறது. காலாவதியான தின்பண்டங்கள், போலி டீத்தூள் விற்பனையும் சூடுபிடித்துள்ளாக தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. புகாரை தொடர்ந்து உணவு பாதுகாப்பு துறை அலுவலர்கள் மனோகரன், முருகேசன், கண்ணன், மணி ஆகியோர் கொண்ட குழுவினர் குள்ளம்பாளையம், கோபி மார்க்கெட், கடை வீதிகளில் சோதனை மேற்கொண்டனர். குள்ளம்பாளையத்தில் ஒரு கடையில் எத்திஃபார்ன் என்ற கெமிக்கல் மூலம் ஸ்பிரே செய்யும், காகிதங்களில் கெமிக்கல் தடவி மாம்பழ குவியலுக்கு இடையில் வைத்து பழுக்க வைக்கப்பட்டதும் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு கடையில் இருந்து, 400 கிலோ மாம்பழம், பஸ் ஸ்டாண்டு, கடை வீதியில் இருந்து சில பாக்கெட் போலி டீத்தூள், நிறமேற்றிய பட்டாணி பாக்கெட்களை பறிமுதல் செய்தனர். சென்றாண்டு ஈரோட்டை சேர்ந்த உணவு பாதுகாப்பு குழுவினர் நேரடியாக கோபியில் சோதனை நடத்தி, கோபி மார்க்கெட் அருகே எத்திஃபார்ன் மூலம், 10 டன் மாம்பழம் வரை பறிமுதல் செய்யப்பட்டனர். கோபியை சேர்ந்த உணவு பாதுகாப்பு குழுவினர் கணக்கு காட்டுவதற்காக, 400 கிலோ மட்டும் பறிமுதல் செய்யப்பட்டது, நுகர்வோர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

**உழவர் பெருவிழா புறக்கணிப்பு**

கோபிசெட்டிபாளையம்: காசிபாளையத்தில் நடந்த உழவர் பெருவிழாவை, விவசாயிகள் புறக்கணிப்பு செய்தனர். டி.என்.பாளையம் யூனியனுக்கு உட்பட்ட, வேளாண் துறை சார்பில் காசிபாளையத்தில் உழவர் பெருவிழா நடந்தது. உழவர் பெருவிழாவில் தடப்பள்ளி வாய்க்கால் பாசனப்பகுதியை சேர்ந்த, 30க்கும் மேற்பட்ட விவசாயிகள், உழவர் பெருவிழாவுக்கு வந்திருந்தனர்.

விளக்க கூட்டம் நடக்கும் நேரத்தில், பழைய ஆயக்கட்டு நீர்பாசன உரிமையை நிலைநாட்ட வேண்டும் எனக்கோரி, டி-1 பாசன சபை தலைவர் பழனிசாமி தலைமையில் விவசாயிகள் புறக்கணிப்பு செய்தனர். மற்றொரு தரப்பிலான விவசாயிகள், உழவர் பெருவிழாவில் கலந்து கொண்டதால், உழவர் பெருவிழா தொடர்ந்து நடந்தது.

**சீனிவாசநல்லூர் பஞ்சாயத்தில் உழவர் பெருவிழா கோலாகலம்**

தொட்டியம்: தொட்டியம் யூனியன் சீனிவாசநல்லூர் பஞ்சாயத்தில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவிற்கு வேளாண் உதவி இயக்குனர் ராஜாமணி வரவேற்றார். பஞ்சாயத்து தலைவர் நாகம்மாள் தலைமை வகித்தார். விழாவில், தோட்டக்கலை துணை இயக்குனர் சந்திரசேகரன், "பயிர்கள் சாகுபடி' குறித்தும், "திசு வாழை' குறித்தும், வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் சத்தியமூர்த்தி, "நவீன இயந்திரங்கள் பயன்பாடு' குறித்தும், கால்நடை உதவி மருத்துவர் ராஜசேகர், "கால்நடை' குறித்தும், பட்டு வளர்ச்சி துறை ஆய்வாளர் ராஜமுத்து, "பட்டு வளர்ச்சி' குறித்தும் பேசினர்.உதவி வேளாண் அலுவலர் சரவணகுமார், "வேளாண் விற்பனை மற்றும் வணிகம்' குறித்து விளக்கம் அளித்தார். அட்மா திட்ட மேலாளர் வரகுணபாண்டியன், அட்மா திட்டங்கள் குறித்து பேசினார்.விவசாயிகளுக்கு மண்மாதிரி எடுத்தல், எலி காட்டுப்பாடு, விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுபாடு) ஜெயராஜ் உரக்கட்டுபாடு குறித்தும், திருச்சி கலெக்டரின் நேர்முக உதவியாளர் பாண்டியராஜன் திருந்திய நெல் சாகுபடி முறை குறித்தும் பேசினர். விழா ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் மாசிலாமணி, கார்த்திகேயன், சாமிநாதன், அட்மா தொழில் நுட்ப வல்லுனர்கள் கோபிநாத், யுவராஜ் ஆகியோர் செய்திருந்தனர். வேளாண் அலுவலர் வேல்முருகன் நன்றி கூறினார்.

**பணிக்கொள்கைகளை உருவாக்கிட வேளாண் பட்டதாரிகள் வலியுறுத்தல்**

பெரம்பலூர்: வேளாண் பட்டதாரிகள் ஆசிரியர்கள் சங்கத்தை சேர்ந்த மாநில நிர்வாகிகள் மாதவன், பகுத்தறிவு, ராமன், சேகர், ராமகிருஷ்ணன், லதா ஆகியோர் முதல்வருக்கு அனுப்பி யுள்ள கோரிக்கை மனு:கடந்த, 2001ம் ஆண்டு அரசு மேல்நிலைப்பள்ளிகளில் வேளாண் பாடத்தை அறிமுகம் செய்து, 100 வேளாண் பட்டதாரிகளை பணியமர்த்தினர். அதன் பின்னர் 2009ம் ஆண்டு 200 பேர் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது சட்டசபையில் புதிதாக, 25 வேளாண் தொழில்நுட்ப பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படும் என அறிவித்துள்ளீர்கள். இதற்கு எங்களது சங்கம் சார்பில் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

பொதுக்கல்வி திட்டத்தில் வேளாண் கல்வியை அறிமுகம் செய்து புதிய பணியிடங்களை தோற்றுவிக்க வேண்டும். வேளாண் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்காக ஊதியம் வழங்க வேண்டும். பணிக்கொள்கைகளை உருவாக்கி உரிமைகள் வழங்க வேண்டும். பொது கல்வி திட்ட ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். பள்ளிகளில் வேளாண் ஆய்வகங்களை நிறுவ வேண்டும். இவ்வாறு அம்மனுவில் தெரிவித்துள்ளனர்.

**தேசிய வங்கிகளில் பயிர்க்கடன் வழங்க மத்திய நிபுணர் குழு பரிந்துரைக்கணும் விவசாய இயக்க நிர்வாகி கோரிக்கை**

திருத்துறைப்பூண்டி: "விவசாயிகள் நாடு முழுவதும் தற்கொலை செய்து கொள்வதற்கு தேசிய வங்கிகளில் விவசாயிகளுக்கு போதிய பயிர்க்கடன் வழங்குவதில்லை என்பது தான் காரணமாகும்; அதனால், பயிர் கடன்களை போதிய அளவில் வழங்க, மத்திய அரசுக்கு, மத்திய நிபுணர் குழு

பரிந்துரைக்க வேண்டும்' என, "நமது நெல்லை காப்போம்' இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் வலியுறுத்தியுள்ளார். திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி கள்ளிக்குடி கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு மத்திய நிபுணர் குழுவினர் வறட்சி பாதிப்பு பகுதிகளை ஆய்வு செய்தனர். அப்போது, "நமது நெல்லை காப்போம்' இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் அளித்த மனுவில் மேலும் கூறியுள்ளதாவது: கடந்த 2012-13ம் ஆண்டு டெல்டா மாவட்ட சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து போதிய நீர் திறந்து விட முடியவில்லை. இதனால், தமிழக அரசு உழவு மானியம், விதை, டீஸல், இடுபொருள், ஆயில் இன்ஜின் மானியம் ஆகியவற்றையும், வறட்சிக்கான புதிய தொழில்நுட்பங்களை வழங்கவும் முதல்வர் ஜெ., உத்தரவிட்டார். இதனால், விவசாயிகள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டது. வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வழங்க வேண்டும் என, அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. இதில், 15 ஆயிரம் ரூபாயை தமிழக அரசு வழங்கியது. ஆனால், பல மாநிலங்களுக்கு வறட்சி நிவாரணத்தை அறிவித்துள்ள மத்திய அரசு, தமிழகத்துக்கு நிதி வழங்காமல் புறக்கணித்துள்ளது. டெல்டா மாவட்டத்தில் பயிர் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் முழுமையான பயிர் காப்பீட்டு தொகையை 2013-14ம் ஆண்டு சாகுபடிக்கு முன், ஜூலை மாதமே வழங்க மத்திய நிபுணர் குழு, மத்திய அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும். மத்திய அரசிடம், தமிழக அரசு கோரிய நிதியை விடுவிக்க குழு பரிந்துரைத்து, மத்திய தொகுப்பில் உபரியாக உள்ள மின்சாரத்தை தமிழகத்துக்கு வினியோகிக்கவும் வழிவகை செய்ய வேண்டும். வேளாண் என்பது மாநில அரசின் பட்டியலில் வருகிறது. மாநில அரசின் அதிகாரத்தில் மத்திய அரசு தலையிட்டு, பன்னாட்டு தொழில்நுட்பங்களை திணிப்பதை கைவிட வேண்டும். அந்தந்த மாநில அரசு விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள் வழங்கும் தொழில்நுட்பத்துக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். விவசாயிகளுக்கு தேசிய வங்கிகளில் போதிய பயிர் கடன் கிடைப்பதில்லை. இதனால், கந்துவட்டிக்கு கடன் வாங்கி விவசாயிகள் அவதிப்படுகின்றனர். இதை தடுக்கும் வகையில் போதிய கடன் வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் வகையில் குழு பரிந்துரை அமைய வேண்டும். இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

**புதுகை வந்த மத்தியக்குழுவிடம் கோரிக்கைகளை முன்வைத்த விவசாயிகள்**

புதுக்கோட்டை: விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கடனை தள்ளுபடி செய்யவேண்டும், வறட்சி நிவாரண நிதியை உயர்த்தி வழங்க வேண்டும், நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்த வேண்டும், வறட்சி நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் துவக்கவேண்டும் என மத்திய குழுவிடம் புதுக்கோட்டை மாவட்ட டெல்டா பகுதி விவசாயிகள் முறையிட்டனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள டெல்டா பகுதிகளை மத்தியக் குழுவினர் நேற்று(8ம் தேதி) பார்வையிட்டனர். முன்னதாக நாகை மாவட்டத்தில் வறட்சி பகுதிகளை பார்வையிட்ட மத்தியக்குழுவினர் பிற்பகல் 2.30 மணிக்கு புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வந்தனர். அரசு விருந்தினர் மாளிகையில் அரைமணி நேரத்தில் மதிய உணவை முடித்த மத்தியக்குழுவினர் மாலை 3 மணிக்கு புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட கோபாலசமுத்திரம் பகுதியில் நகராட்சி நிர்வாகத்தின் சார்பில், வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ்

எட்டு லட்சம் ரூபாய் செலவில் நடைபெற்றுவரும் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணியினை பார்வையிட்டனர்.

நகராட்சிக்குட்பட்ட நாடிமுத்து நீரேற்று நிலையம், எல்.என்.புரம் பகுதிகளில் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் தலா எட்டு லட்சம் ரூபாய் செலவில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் பணி நடைபெற்றுவருவதாக மத்திய குழுவிடம் கலெக்டர் மனோகரன் தெளிவுபடுத்தினார். தொடர்ந்து நாகுடி சென்ற மத்தியக்குழுவினர் காவிரி டெல்டா கடைமடை பகுதிகளில் வறட்சியினால் விவசாய விளை நிலங்கள் தரிசு நிலங்களாக மாறியுள்ளதை பார்வையிட்டனர். கல்லணை கால்வாய் பாசனப்பகுதி விவசாயிகள் சங்கம் சார்பில் விவசாயி ராமசாமி மத்தியக்குழுவிடம் சில கோரிக்கைகளை முன்வைத்தார். மாவட்டத்தில் பருவமழை பொய்த்துவிட்டதாலும், காவிரியில் தண்ணீர் விட கர்நாடகா மறுத்துவிட்டதாலும் புதுக்கோட்டை மாவட்ட டெல்டா பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டாக கடும் வறட்சி நிலவுகிறது. இதனால் விவசாயம் அடியோடு முடங்கியுள்ளது. நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துவிட்டதால் பம்புசெட் பாசனத்தை நம்பியுள்ள பயிர் சாகுபடியும் முடங்கியுள்ளது. இதனால் விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. தீவனம் இல்லாமலும், தண்ணீர் இல்லாமலும் கால்நடைகளும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் விதமாக வறட்சி நிவாரண உதவித்தொகையை ஏக்கருக்கு, 25 ஆயிரம் ரூபாய் வீதம் உயர்த்தி வழங்கவேண்டும். குளம், கண்மாய், ஏரி, ஊரணி, வரத்துவாரி உள்ளிட்ட நீர்நிலைகளை தூர்வாரி ஆழப்படுத்தவேண்டும். வறட்சி நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் துவக்கவேண்டும். கால்நடைகள் தண்ணீர் பருக ஏதுவாக நீர்நிலைகளில் ஆழ்குழாய் கிணறு மற்றும் தரைமட்ட நீர்தேக்க தொட்டி அமைக்கவேண்டும். விளை நிலங்களில் தீவனப்புல் வளர்க்க விவசாயிகளுக்கு முழு மானியம் வழங்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர். விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்த மத்தியக்குழுவினர் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

**அவசரமாக சென்ற மத்தியக் குழுவினர் காத்துநின்ற விவசாயிகள் ஏமாற்றம்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சிப் பகுதிகளை பார்வையிட வந்த மத்தியக்குழுவினர் கண்துடைப்புக்காக இரண்டு பகுதிகளை ஒரு மணி நேரம் மட்டுமே பார்வையிட்ட பின் அவசர, அவசரமாக புறப்பட்டுச் சென்றனர். வறட்சி பாதிப்பு குறித்து மத்திய குழுவிடம் முறையிடுவதற்காக காத்துநின்ற விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் ஏமாற்றமடைந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சியினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், வறட்சி நிவாரணப் பணிகள் குறித்தும் மத்திய திட்டக் குழுவின் துணை ஆலோசகர் (வேளாண்மைப் பிரிவு) மானாஷ் சௌத்திரி தலைமையிலான மத்தியக் குழுவினர் நேற்று(8ம் தேதி) ஆய்வு செய்தனர். மத்தியக்குழு ஆய்வு செய்யவுள்ள பகுதிகள் குறித்து மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பயணப்பட்டியல் தயார் செய்து வெளியிடப்பட்டது. இதனடிப்படையில் அறந்தாங்கி நகராட்சிக்குட்பட்ட கோபாலசமுத்திரத்தில் ஆய்வுப் பணியை துவக்கும் மத்தியக்குழுவினர் தொடர்ந்து சீனமங்கலம், நாகுடி, ஏகப்பெருமாளூர் ஆகியப் பகுதிகளில் ஆய்வு செய்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் வறட்சியினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து மத்தியக் குழுவிடம் முறையிடுவதற்காக சீனமங்கலம், ஏகப்பெருமாளூர் மற்றும் சுற்றுவட்டார கிராமப்பகுதிகளைச்

சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கோரிக்கை மனுக்களுடன் நேற்று(8ம் தேதி) காலை முதலே மத்தியக் குழுவின் வருகையை எதிர்பார்த்து முகாமிட்டிருந்தனர். சிலர் கருகிய பயிர்கள் மற்றும் தீவனம் இல்லாமல் தோலும், எலும்புமாக உள்ள கறவை மாடுகள், ஆடுகள் உள்ளிட்ட கால்நடைகளையும் கொண்டுவந்திருந்தனர். ஆனால், அறந்தாங்கி நகராட்சிகுட்பட்ட கோபாலசமுத்திரம், நாகுடி ஆகிய இரண்டு பகுதிகளை மட்டுமே ஆய்வு செய்த மத்தியக் குழுவினர் அவசர, அவசரமாக திருச்சி புறப்பட்டு சென்றனர். இதனால் சீனமங்கலம், ஏகப்பெருமாளூர் கிராமங்களில் மத்தியக் குழுவின் வருகையை எதிர்பார்த்து காத்துகிடந்த விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் ஏமாற்றமடைந்தனர். வழக்கம்போல் வந்தார்கள், பார்த்தார்கள், சென்றார்கள் என்ற நிலைப்பாட்டைத் தான் தற்போதும் மத்தியக்குழுவினர் கடைபிடித்ததாக விவசாயிகள் ஆதங்கப்பட்டனர். மத்தியக் குழுவை பதறவைத்த வைரிவயல் மாட்டுவண்டி போட்டி: அறந்தாங்கி அடுத்த வைரிவயல் முனீஸ்வரர் கோவில் சித்திரை திருவிழாவை முன்னிட்டு அப்பகுதியில் நேற்று(8ம் தேதி) மாட்டுவண்டி மற்றும் குதிரைவண்டி போட்டி நடந்தது. இவற்றை பார்த்து ரசிப்பதற்காக வைரிவயல் மற்றும் சுற்றுவட்டார கிராமப்பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான கிராம மக்கள் குவிந்திருந்தனர். நாகுடிக்கு மத்தியக்குழுவினர் வருகையை முன்னிட்டு அறந்தாங்கி - நாகுடி சாலையில் போட்டிகள் நடத்த மாலை 5 மணிவரை தடைவிதிக்கப்பட்டது. நாகுடிக்குச் சென்ற மத்தியக்குழுவினர் வைரிவயல் கிராமத்தில் ரோட்டோரமாக ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு நின்றதை பார்த்து பதட்டம் அடைந்தனர். வறட்சி பாதிப்பு குறித்து முறையிடுவதற்காக வந்துள்ள கூட்டமாக இருக்கும் என நினைத்த மத்தியக்குழுவினர், வழிமறித்து விடுவார்களோ என அஞ்சினர். வைரிவயல் பகுதியை தாண்டிச் சென்ற பின்னரே அவர்கள் நிம்மதியடைந்தனர்.

## திருந்திய நெல் சாகுபடி முறையை விவசாயிகள் பின்பற்ற வேண்டும்: வேளாண்துறை அறிவுரை

கும்பகோணம்: "திருந்திய நெல் சாகுபடி முறையை விவசாயிகள் பின்பற்றி அதிக மகசூல் பெற வேண்டும்' என அத்தியூரில் நடந்த உழவர் பெருவிழாவில் வேளாண் துறையினர் தெரிவித்தனர். கும்பகோணம் அடுத்த அத்தியூரில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவிற்கு பஞ்., மன்றத் தலைவர் நேரு தலைமை வகித்தார். ஒன்றிய பெருந்தலைவர் மகாலிங்கம் சிறப்புரையாற்றினார். வட்டார அட்மா திட்ட தலைவர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். விழாவில், வேளாண் துணை இயக்குநர் கிருஷ்ணகுமார் பேசுகையில், ""வேளாண் துறையில் பல நவீன தொழில்நுட்பங்கள் கையாளப்பட்டு வருகிறது. அதன்படி, விவசாயிகளும் மேற்கொண்டால் அதிக மகசூல் எடுக்கலாம்.

ஒவ்வொரு நிலத்திற்கும் அதன் தன்மைக்கு ஏற்பட உரமிட வேண்டும். எனவே, விவசாயிகள் தங்களுடைய நிலத்தின் தன்மையை தெரிந்து கொள்ள மண்மாதிரியை எடுக்க வேண்டும். திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றி அதிக மகசூல் பெற வேண்டும்," என்றார். இதேபோல், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி மற்றும் தீவனப்புல் வளர்த்தல் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. விழாவில், வேளாண் அலுவலர் செல்வமணி, துணை வேளாண் அலுவலர் மகாலிங்கம், வேளாண் பொறியியல் துறை, தோட்டக்கலைத்துறை

அலுவலர்களும் கலந்து கொண்டு பேசினர். வேளாண் உதவி அலுவலர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

**திண்டுக்கல் மாவட்டத்திற்கு வராத மத்திய வறட்சி குழு விவசாயிகள் கடும் அதிருப்தி**

திண்டுக்கல்:தமிழகத்தில் வறட்சியை பார்வையிட வந்துள்ள மத்திய குழு திண்டுக்கல் வராததால், விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.திண்டுக்கல் மாவட்டம் விவசாயத்தை நம்பியுள்ளது. மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 830 மி.மீ., கடந்தாண்டு 523 மி.மீ.,தான் மழை பதிவானது. ஆறுகள், குளங்கள், கண்மாய்களில் தண்ணீரின்றி வறண்டுள்ளன. கிணறுகளிலும் நீர் மட்டம் குறைந்துள்ளது. குடிநீர் தட்டுப்பாடும் உள்ளது.பாதிப்பு: விவசாயத்தை பெரிதும் நம்பியுள்ள ஆத்தூர், தாணடிக்குடி, பன்றிமலை, பண்ணைக்காடு, கொடைக்கானல் மேல்மலை, கீழ் மலை பகுதி, நிலக்கோட்டை, செம்பட்டி, கன்னிவாடி, ஒட்டன்சத்திரம், பழநி, வேடசந்தூர், நத்தம் உட்பட பல குதிகளில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு மாநில அமைச்சர்கள் 7 பேர் கொண்ட குழு, திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர், ஒட்டன்சத்திரம் ஆகிய ஊர்களில் சில இடங்களை ஆய்வு செய்தனர்.அதிருப்தி:தமிழகத்தில் ஆய்வு மேற்கொண்டுள்ள மத்திய குழு திண்டுக்கல் மாவட்டத்திற்கு வராதது விவசாயிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.மாவட்ட விவசாய சங்க செயலாளர் பெருமாள்சாமி கூறுகையில், முழுக்க, முழுக்க விவசாயத்தை நம்பியுள்ள, நெல், மக்காச்சோளம், மலைக்காய்கறிகள், பழ வகைகள் மழையின்றிபாதிக்கப்பட்ட திண்டுக்கல் மாவட்டத்தை புறக்கணித்துள்ளனர். இதனால் விவசாயிகள் அதிருப்தியடைந்துள்ளோம், "என்றார்.கலெக்டர் வெங்கடாசலம் கூறுகையில்,""திண்டுக்கல் மாவட்டத்திற்கு வறட்சி பகுதியை பார்வையிட நாங்கள் மத்திய குழுவை அழைத்தோம். அவர்கள் சென்னையிலேயே திண்டுக்கல் மாவட்டத்தில் ஆய்வு இல்லை என முடிவு செய்துள்ளதாக,தெரிவித்துள்ளனர்," என்றார்.

**கால்நடை பசுந்தீவனம் விவசாயிகளுக்கு வாய்ப்பு**

தேனி:கால்நடை பசுந்தீவன திட்டத்தில், சேர்ந்து விவசாயிகள் பயனடையலாம், என தெரிவிக்கப்பட்டுள்ளது. வறட்சி நிவாரணத் திட்டத்தில், 800 ஏக்கர் நிலப்பரப்பில் இறவை பாசனத்தில் சோளம் பயிரிட்டு, தீவனம் அபிவிருத்தி செய்திட தமிழக அரசு 54 லட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் திட்டம் அறிவித்துள்ளது.குறைந்தபட்சம், அரை ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்அடையலாம். உபரியாக உள்ள தீவனத்தை, கூட்டுறவு சங்கம் மூலம் விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு 13 ஆயிரத்து 600 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 50 சதவீதம் 6,800 ரூபாயை பயனாளிகள் பங்களிப்பு தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பயன்பெற விரும்பும் விவசாயிகள், அருகில் உள்ள கால்நடை மருந்தக, உதவி மருத்துவர்களை அணுகலாம். விபரங்களுக்கு, உதவி இயக்குனர், கால்நடை பராமரிப்பு, உத்தமபாளையம்- 94898 84244.பெரியகுளம் -90957 24866, தொடர்பு கொள்ளலாம்.

**இரவில் மின்சப்ளை ரத்து விவசாயிகளுக்கு பாதிப்பு**

தேனி:தேனி மற்றும் ஒன்றிய பகுதிகளில் உள்ள கிராமங்களில், மீண்டும் இரவு நேர மின்சப்ளை கடும் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளதால் விவசாயிகளும், பொதுமக்களும் புலம்புகின்றனர்.தேனி ஒன்றிய கிராமங்களில், தற்போது பல்வேறு பயிர் சாகுபடி நடந்து வருகிறது. பகலில் 6 மணி நேரமும், இரவில் ஆறு மணி நேரமும் மும்முனை மின்சாரம் சப்ளை செய்யப்பட்டு வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாகவே மும்முனை மின்சாரம் எப்போது வரும், எப்போது போகும், என யாருக்கும் தெரியவில்லை. மாறாக இரவில் சப்ளையாகும் மின்சப்ளை அளவு குறைக்கப்பட்டு வந்தது. கடந்த சில நாட்களாக இரவு சப்ளை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. தேனி நகருக்குள்ளும் இதே பிரச்னை நிலவுகிறது. இரவில் பல மணிநேரம் மின்சப்ளை துண்டிக்கப்படுவதால் மக்கள் அவதிப்படுகின்றனர். இது குறித்து பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மின்வாரிய அலுவலகத்திடம் கேட்டால், "அதிகாரிகள் எங்களுக்கு ஒன்றும் தெரியாது' என மட்டும் பதில் அளிக்கின்றனர். இதனால் தோட்டங்களுக்கு நீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் சிரமத்திற்குள்ளாகி உள்ளனர். விவசாயம் பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளது

**திருவாடானையை புறக்கணித்த மத்திய குழு: விவசாயிகள் அதிருப்தி**

திருவாடானை:வறட்சியை பார்வையிட வந்த மத்திய, மாநில குழுக்கள், திருவாடானையை புறக்கணித்ததால், விவசாயிகள் அதிருப்தியடைந்தனர்.திருவாடானை பகுதியில் 42 ஆயிரத்து 250 ஏக்கர் நெல் பயிர் பாதிக்கப்பட்டது. வைக்கோல் கூட மிஞ்சாததால் கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்காமல் பட்டினியால் வாடும் நிலை ஏற்பட்டுள்ளது. நகையை அடகு வைத்தும், வட்டிக்கு வாங்கியும் ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்தனர். இந்நிலையில் சில மாதங்களுக்கு முன், எட்டு அமைச்சர்கள் வறட்சியை பார்வையிடவந்த போது திருவாடானைக்கு வரவில்லை. அதே போல் நேற்று முன்தினம் வந்த மத்திய ஆய்வு குழுவும் புறக்கணித்ததால் விவசாயிகள் அதிருப்தி அடைந்தனர். திருவெற்றியூர் விவசாயிகள் செல்வம், குமார் கூறுகையில், ""மத்திய ஆய்வு குழு சோழந்தூருக்கு வருவதாக தகவல் கிடைத்ததும், அங்கு சென்று திருவாடானை பகுதியின் நிலைமையை எடுத்து கூறலாம், என பல மணி நேரம் காத்திருந்தோம். ஆனால் அருகில் நெருங்க முடியாதபடி அதிகாரிகள் தடுத்துவிட்டனர். ஆகவே ஏமாற்றத்துடன் ஊர் திரும்பினோம். ஏக்கருக்கு நஷ்டஈடு 5,000 ரூபாய் போதாது. கூடுதலாக நிவாரணம் வழங்க வேண்டும்," என்றனர்.

**10 லட்சம் ஆடு, மாடுகளுக்கு தீவனம் இல்லைமத்திய குழுவிடம் விவசாயிகள் முறையீடு**

விருதுநகர்:""விருதுநகர் மாவட்டத்தில் வறட்சியால்,10 லட்சம் ஆடு, மாடுகளுக்கு தீவனம் இல்லை. இதனால் பால் உற்பத்தி வெகுவாக குறைந்து வருகிறது," என, வறட்சி ஆய்வுக்கு வந்த மத்திய குழுவிடம், விவசாயிகள் முறையிட்டனர்.தமிழகத்தில் எப்போதும் இல்லாத அளவு கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. விவசாயிகளும் பெரும் நஷ்டத்திற்குள்ளாகி உள்ளனர். வறட்சி குறித்த ஆய்வு செய்ய,மத்திய சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்புமேலான் இயக்குனர் பிரவேஷ் சர்மா தலைமையில் ஒன்பது பேர் குழுவை மத்திய அரசு நியமித்துள்ளது. இவர்கள் இரு

பிரிவாக பிரிந்து, ஆய்வு மேற்கொண்டனர். பிரவேஷ் சர்மா தலைமையில், ஊரக வளர்ச்சி துறை இயக்குனர் தீரஜ் கக்காடியா, குடிநீர் வடிகால் அமைச்சக துணை ஆலோசகர் பாலசுப்பிரமணியன், மத்திய கால்நடை பராமரிப்பு துறை உதவி ஆணையர் கண்ணா ஆகியோர் ,நேற்று விருதுநகர் மாவட்டத்தில் ஆய்வு மேற்கொண்டனர். நள்ளி, பெத்து ரெட்டியபட்டியில் உள்ள வறட்சி பகுதிகளை பார்வையிட்ட அவர்கள், நள்ளியில் விவசாயி கருப்பசாமி வளர்த்த சீமை புல்லை பார்வையிட்டனர். அவர்களிடம் பேசிய கருப்பசாமி ,"" 7 பசு மாடுகள் , 30 ஆடுகள் வைத்துள்ளேன். இவற்றின் தீவனத்திற்காக 3 ஏக்கரில் சீமை புல் வளர்த்து வருகிறேன். போதிய தண்ணீர் வசதி இல்லாததால், இரண்டு ஏக்கர் புல் கருகி விட்டது,"என்றார். இதன் பின் அங்கு நடந்த கால் நடை மருத்துவ முகாம், சுத்தரிகரிக்கப்பட்ட குடிநீர் பிளாண்ட், அங்கன்வாடி மையம், பண்ணை குட்டம் ஆகியவற்றை பார்வையிட்ட குழுவினர், பெத்து ரெட்டியபட்டி சென்றனர்.குழுவினரிடம் விவசாயிகள் தங்கள் குறைகளை எடுத்து கூறினர். அப்போது அவர்கள், "தண்ணீர் இல்லாமல் தேங்காய் தானாக கீழே விழுகிறது. 20 நாட்களுக்கு ஒரு முறையே குடி நீர் கிடைக்கிறது. குடிநீர் ஆதாரத்தை பெருக்க, கண்மாய்களை ஆழப்படுத்தி, வரத்து கால்வாய்களையும் தூர்வார வேண்டும். கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கி விவசாயம் செய்து, பயிர்கள் கருகியதால் கடனாளிகளாக உள்ளோம். போதிய மழை இல்லாததால், மாவட்டத்தில் உள்ள 10 லட்சம் ஆடு, மாடுகளுக்கு தீவனம் இல்லை. இதனால் பால் உற்பத்தி வெகுவாக குறைந்து வருகிறது. வறட்சியால் தங்கள் நிலத்தை, ரியல் எஸ்டேட், கம்பெனி நிர்வாகத்திடம் குறைந்த விலைக்கு விற்ற விவசாயிகள், வேறு பிழைப்பு தேடி வருகின்றனர்.பல ஊராட்சிகளில் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான சம்பளத்தை, ஆறு வாரங்களாகியும் வழங்காமல் உள்ளனர். நான்கு வழி சாலை போல், நீர்வழி இணைப்பையும், அனைத்து பகுதிக்கும் இணைக்க வேண்டும்,' என்றனர் குழுவினருடன், வருவாய் நிர்வாக துறை கூடுதல் செயலர் ஸ்ரீதர், நகராட்சி நிர்வாக ஆணையர் சந்திரகாந்த், கால்நடை துறை இயக்குனர் பழனிச்சாமி, ஊரக வளர்ச்சி துறை கூடுதல் இயக்குனர் பொன்னையா, விருதுநகர் கலெக்டர் ஹரிஹரன் சென்றனர். ஹிந்தியில் பேசிய விவசாயிகள் சாத்தூர் நள்ளிக்கு, மத்திய வறட்சி குழுவினர் வந்ததை தொடர்ந்து, அங்குள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலைய அறைக்கு "பெயின்ட்' அடிக்கப்பட்டிருந்தது. முன்புறம் அடிக்கப்பட்ட "பெயின்ட்' பக்கவாட்டு சுவரில் அடிக்கவில்லை. இதுவே குழுவினருக்கு புதிதாக "பெயின்ட்'அடித்துள்ளதை காட்டி கொடுத்தது. பெத்துரெட்டியபட்டியில் வறட்சி குழுவினருடன் பேசிய விவசாயிகளில் சிலர், ஹிந்தியில் பேசினர். இதை கேட்ட குழுவினர், தமிழ், ஆங்கிலத்தில் பேசினாலே புரியும் என்றனர். இதை தொடர்ந்து தமிழில், தங்களது பிரச்னைகளை எடுத்து கூறினர்.

**வேலூரில் காய்கறிகள் திடீர் விலை உயர்வு**

வேலூர்,

வேலூர் மாவட்டத்தில் காய்கறி விலை திடீரென்று உயர்ந்தது.

காய்கறி விலை

வேலூரின் பிரதான காய்கறி மார்க்கெட்டான நேதாஜி மார்க்கெட்டுக்கு, ஆந்திரா, கர்நாடகம், ஊட்டி, கொடைக்கானல் மற்றும் பகுதிகளில் இருந்து தினமும் இரவில் லாரிகளில் காய்கறி மூட்டைகள் வந்து இறங்குகிறது. பின்னர் அந்த மூட்டைகள் அங்கிருந்து வேலூர் மாவட்டம் முழுவதும் விநியோகம் செய்யப்படுகிறது.

வேலூர் டவுனில் டோல்கேட், காகிதப்பட்டறையில் உள்ள உழவர் சந்தையும், காட்பாடியில் உள்ள உழவர் சந்தையும் அந்தந்த பகுதி மக்களின் காய்கறி தேவையை பூர்த்தி செய்து வருகின்றன. மற்ற ஊர்களை காட்டிலும் வேலூரில் காய்கறி விலை எப்போழும் கட்டுக்குள்ளே இருக்கும். ஆனால் கோடைக்காலம் தொடங்கியதை தொடர்ந்து மார்க்கெட்டுக்கு காய்கறிவரத்து வெகுவாக குறைந்துள்ளது.

இதன்காரணமாக காய்கறி விலையும் வீர்ரென்று ஏறியுள்ளது. கடந்த சில

வேலூரில் நேற்று காய்கறியின்(உழவர்சந்தை) விலை விவரம் வருமாறு:–

விலை நிலவரம்

பீன்ஸ்–ரூ.40, தக்காளி–ரூ.26, அவரை–ரூ.36, கத்தரி–ரூ.20, முட்டை கோஸ்–ரூ.14, உருளைக்கிழங்கு ரூ.22, கேரட்–ரூ.30, பீட்ரூட்–ரூ.28. முருங்கைக்காய்–24, புடலங்காய் 16, பாகற்காய்–24, பச்சை மிளகாய்–40, கறிவேப்பிலை–ரூ.18.முள்ளங்கி–ரூ.12., வெண்டைக்காய்–ரூ.24.

இது போல அனைத்து வகையான காய்கறிகளின் விலையும் கடந்த சில நாட்களை ஒப்பிடும் போது ரூ.3 முதல் ரூ.10 வரை உயர்ந்து விட்டது. அதிலும் பச்சை மிளகாய், கருவேப்பிலை விலைகள் தாறுமாறாக உயர்ந்து உள்ளது.

காய்கறி மார்க்கெட், உழவர்சந்தைகளை தாண்டி குடியிருப்பு பகுதிகளில் இருக்கும் சிறிய சிறிய கடைகளில் காய்கறி விலை தாறுமாறாக உள்ளது. மேற்கண்ட விலைகளில் ரூ.4 முதல் 8 வரை உயர்த்தியே விற்கப்படுகிறது.

காய்கறி விலை திடீர் உயர்வு குறித்து காய்கறி மொத்த விற்பனையாளர் ஒருவரிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:–

<u>விலை உயர்வு ஏன்?</u>

தக்காளி, முள் கத்தரி, அவரை போன்றவைகள் பொருத்தவரை வேலூர் சுற்று வட்டார பகுதிகளில் விளைந்து மார்க்கெட்டு வருகிறது. தற்போது இந்த காய்கறின் விளைச்சல் காலம் முடிந்து விட்டது தான் விலை உயர்வுக்கு காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

பீன்ஸ், முட்டைகோஸ், கேரட், உருளைக்கிழங்கு போன்றவைகள் பெரும்பாலும் ஆந்திரா, கர்நாடகா, ஊட்டி, கொடைக்கானல், மேட்டுப்பாளையம் போன்ற மலைப்பிரதேசங்களில் இருந்து மார்க்கெட்டு வருபவை. கோடைகாலம் நடைபெறுவதாலும், தண்ணீர் பிரச்சினை அதிகமாக இருப்பதாலும் மேற்கண்டவை விளைவிக்கும் பயிர்கள் காய்ந்து விட்டதாக கூறுகிறார்கள். அதனால் அந்த காய்கறிகளின் வரத்தும் குறைந்து விட்டது. இதுதான் விலை உயர்வுக்கு காரணமாகும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**கொல்லிமலையில் அன்னாசி பழம் வரத்து தொடங்கியது விற்பனை ஜோர்**

சேந்தமங்கலம்,

கொல்லிமலையில் அன்னாசி பழம் வரத்து தொடங்கியதால், விற்பனை ஜோராக நடைபெற்று வருகிறது.

அன்னாசி பழம்

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றான இயற்கை எழில் கொஞ்சும் கொல்லிமலையில் உள்ள அரியூர்நாடு, குண்டூர்நாடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் 500 ஏக்கருக்கு மேல் அதிக சுவையுடன் கூடிய நாட்டு ரக அன்னாசி பழங்கள் பயிரிடப்பட்டு உள்ளது.

இங்கு விளைவிக்கப்படும் அன்னாசி பழங்கள் சேலம், ஈரோடு, சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் கொல்லிமலை பகுதியில் ஏப்ரல் மாதத்தில் தொடங்கும் இந்த அன்னாசி பழ சீசன் ஆகஸ்ட் மாதம் வரையில் நடைபெறும்.

விலை குறைந்தது

கொல்லிமலையில் உள்ள ஆகாயகங்கை நீர்வீழ்ச்சி, அரப்பளீஸ்வரர் கோவில் உள்ளிட்ட பல்வேறு முக்கிய இடங்களை சுற்றிப்பார்க்க வரும் சுற்றுலா பயணிகள், பின்னர் ஊர் திரும்பும்போது இங்கு விளையும் சுவை மிகுந்த அன்னாசி மற்றும் பலாப்பழங்களை ஆர்வமுடன் வாங்கிச் செல்வார்கள்.

கடந்த ஆண்டு 25 பழங்கள் கொண்ட ஒரு மூட்டை அன்னாசி ரூ.600 முதல் ரூ.700 வரை விற்கப்பட்டு வந்தது. இந்த வருடம் சிசன் தொடங்கி சில வாரங்களே ஆவதால் தற்போது ஒரு மூட்டை ரூ.400 முதல் ரூ.500 வரை விற்கப்பட்டு வருகிறது. இந்த விலை வரும் வாரங்களில் கூடுதலாகும் என எதிர் பார்க்கப்படுகிறது.

வரத்து தொடங்கியது

தற்போது கொல்லிமலை பகுதியில் இருந்து வாரம் சுமார் 20-க்கும் மேற்பட்ட மினி டெம்போ வாகனங்களில் அன்னாசி பழங்கள் சோளக்காடு வாரச் சந்தைக்கு கொண்டு வரப்படுகிறது. பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள் அந்த பழங்களை ஏலம் எடுத்து சென்று, தங்கள் பகுதிகளில் விற்பனை செய்கின்றனர்.

சோளக்காட்டில் உள்ள வாரச்சந்தை ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை என 2 நாட்கள் நடைபெறும். தற்போது வாரச்சந்தைக்கு அன்னாசி பழம் வரத்து தொடங்கி உள்ளதால், அங்கு கூடை கூடையாய் அன்னாசி பழங்கள் குவித்து வைக்கப்பட்டு வியாபாரம் ஜோராக நடைபெற்று வருவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**மொடக்குறிச்சி விற்பனைக்கூடத்தில் தேங்காய்–கொப்பரை தேங்காய் ஏலம்**

மொடக்குறிச்சி

மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் தேங்காய் மற்றும் கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. மொடக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் 141 மூட்டைகளில் 3 ஆயிரத்து 780 கிலோ எடையுள்ள கொப்பரை தேங்காயை விற்பனைக்கு கொண்டுவந்திருந்தனர்.

இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் குறைந்தபட்ச விலையாக ஒரு கிலோ 39 ரூபாய் 55 காசுக்கும், அதிகபட்ச விலையாக ஒரு கிலோ 41 ரூபாய் 55 காசுக்கும் ஏலம் போனது.

2–ம் தர கொப்பரை தேங்காய் குறைந்தபட்ச விலையாக ஒரு கிலோ 28 ரூபாய் 50 காசுக்கும், அதிகபட்ச விலையாக ஒரு கிலோ 38 ரூபாய் 85 காசுக்கும் ஏலம் போனது. மொத்தம் ஒரு லட்சத்து 49 ஆயிரத்து 855 ரூபாய்க்கும் விற்பனையானது.

இதேபோல் 24 ஆயிரத்து 532 தேங்காய்கள் கொண்டு வந்திருந்தனர். இதில் தேங்காய் ஒரு டன் குறைந்தபட்ச விலையாக 9 ஆயிரத்து 680 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக ஒரு டன் 13 ஆயிரத்து 650 ரூபாய்க்கும் ஏலம் போனது.

**குன்னூர் சிம்ஸ் பூங்காவில் செண்டு மல்லிகையை பாதுகாக்க கூடாரம் அமைக்கும் பணி தீவிரம்**

குன்னூர்,

குன்னூர் சிம்ஸ்பூங்கா வில் செண்டு மல்லி கையை பாதுகாக்க கூடா ரம் அமைக்கும் பணி தற்போது தீவிரமாக நடை பெற்று வருகிறது.

குன்னூர் சிம்ஸ் பூங்கா

குன்னூர் சிம்ஸ் பூங்கா குன்னூர் பகுதியில் பிரசித்தி பெற்ற சுற்றுலா தலமாக உள் ளது. இயற்கையோடு ஒட்டி உள்ள இந்த பூங்காவில் தற் போது சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்து உள்ளது.கடந்த ஏப்ரல் மாதத்தில் 64 ஆயிரத்து 151 சுற்றுலா பயணி கள் வருகை தந்து உள்ளனர்.இந்த மாதம் கடந்த 1-ந் தேதி முதல் 7-ந் தேதி வரை 32 ஆயிரத்து 122 சுற்றுலா பயணிகள் சிம்ஸ் பூங்காவை கண்டுகளித்து உள்ளனர். இவர்கள் மூலம் 10 லட்சத்து 94 ஆயிரத்து 752 ரூபாய் வருமானம் கிடைத்து உள் ளது.

தற்போது சிம்ஸ் பூங்காவில் சுற்றுலா பயணி களின் வருகை அதிகரித்து உள்ளதால், சுற் றுலா பயணி களின் கவனத்தை ஈர்க்க கடந்த சில மாதங்களுக்கு முன்பு 40 வகைகள் கொண்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் மலர் நாற்றுக்கள் நடவு செய்யப் பட்டன. இவைகள் தற்போது பூத்து குலுங்கி சுற்றுலா பயணி களை இன்முகத்தோடு வர வேற்கின்றன.

கூடாரம் அமைக்கும் பணி தீவிரம்

சிம்ஸ் பூங்காவில் செண்டு மல்லிகை மலர்கள் ஆயிரத்து 500 செடிகளில் பூத்து உள்ளன. மழை பெய்தால் செண்டு மல்லிகை அழுகி விடும் நிலை யில் உள்ளது. தற்போது குன்னூர் பகுதியில் திடீரென்று மழை பெய்து வருகிறது. இதனால் செண்டு மல்லிகை அழு கும் நிலை ஏற்படுகிறது. இதனை தடுப்பதற்காக மூங்கில் குச்சியில் சிறு கூடாரம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மழை பெய்யும் போது இந்த சிறிய மூங்கில் கூடாரத்தின் மீது பிளாஸ்டிக் தார்பாய் களை போட்டு மலர்களை பாதுகாக்க முடியும் என்று பூங்கா ஊழியர்கள் கூறினர்.

**சிறு பால்பண்ணை அமைக்க மானியத்தொகை ரங்கசாமி வழங்கினார்**

புதுச்சேரி

சிறு பால்பண்ணைகள் அமைக்க மானியத்தொகைகளை முதல்–அமைச்சர் ரங்கசாமி வழங்கினார்.

<u>சிறு பால்பண்ணை</u>

புதுவை அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடைத்துறை மூலமாக மத்திய அரசின் வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 3பசுக்களை கொண்ட சிறு பால்பண்ணை அமைக்கும் திட்டத்தின்கீழ் 50சதவீத மானியத்தில் கால்நடை வளர்ப்பவர்களிலிருந்து 400பயனாளிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர்.

இவர்கள் 249பயனாளிகள் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட உள்ளனர். இவர்களில் 27பயனாளிகள் தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கு 50சதவீத மானியமாக ரூ.13லட்சத்து 50ஆயிரம் வழங்கப்படுகிறது.

மேலும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள கால்நடை வளர்ப்போருக்கு 50சதவீத மானியத்தில் ஒரு கறவை மாடு வாங்க 515பயனாளிகள் தற்காலிகமாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் தற்போது 47பயனாளிகள் முழுவதுமாக இத்திட்டத்தை செயல்படுத்தியுள்ளனர். இவர்களுக்கு 50சதவீத மானியமாக ரூ.5லட்சத்து 87ஆயிரம் வழங்கப்படுகிறது. முதல்–அமைச்சரின் அறிவிப்பின் அடிப்படையில் இத்திட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தி சங்கத்தின் உறுப்பினர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

<u>ரங்கசாமி வழங்கினார்</u>

மேலே குறிப்பிட்ட இத்திட்டத்தை முழுவதுமாக முடித்தவர்களுக்கு முதல்–அமைச்சர் ரங்கசாமி மானியத்தொகையை நேற்று வழங்கினார். நிகழ்ச்சியில் பிப்டிக் தலைவர் அங்காளன் எம்.எல்.ஏ., கால்நடை பராமரிப்புத்துறை இயக்குனர் டாக்டர் பத்மநாபன், இணை இயக்குனர் டாக்டர் மனோகரன், டாக்டர்கள் ராஜீவ், ராணி, சையத் அலி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வடகாட்டில் விவசாயிகளுக்கு, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு கையேடுகள் உழவர் பெருவிழாவில் வழங்கப்பட்டன**

வடகாடு,

வடகாட்டில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு ஒருங் கிணைந்த பயிர் பாது காப்பு கையேடுகளை அதிகாரி வழங்கினார்.

உழவர் பெருவிழா

வடகாடு முத்துமாரியம்மன் கோவிலில் உழவர் பெருவிழா நடைபெற்றது. விழாவுக்கு வேளாண் உதவி இயக்குநர் சிவக்குமார் தலைமை தாங்கி னார். ஊராட்சி மன்றத் தலைவர் கனகராஜ் முன்னிலை வகித்த £ர்.
விழாவில் வேளாண் துணை இயக்குநரும், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவி யாருமான (வேளாண்மை) நாகேந்திரன், விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர் பாது காப்பு கையேடுகளை வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது;-

இலவச ஆலோசனைகள்

இயற்கை சாதகமாக இல்லாத நிலையில் விவசாயிகளை யும், விவசாயத்தையும் பாது காக்கும் வகையில் தமிழக அரசால் நாள் தோறும் புதிய, புதிய திட்டங்கள் அறிவிக் கப்படுகின்றன. திட்டங்கள் முழு அளவில் உரியவரை சென்றடையவே அதிகாரிகள், விவசாயிகளாகிய உங்களை நாடி வந்துள்ளோம். திட் டங்களை அறிந்து கொண்டு அதைப்பெற உரிய ஆவணங் களுடன் சம்பந்தப்பட்ட அலு வலகத்தை அணுக வேண் டும். பயிர் சாகுபடிக்கான அனைத்து ஆலோசனை களும் இலவசமாகவே அளிக்கப்படும்.

தற்போது கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் அனைவரும் கதர் ஆடை அணிய வேண்டும். தின மும் இளநீர் பருக வேண்டும். இயற்கையோடு இயைந்து வாழ்ந்தால் கோடை

யின் தாக்கத்தால் ஏற்படும் கொடிய நோயில் இருந்து காத்துக்கொள்ளலாம். இவ் வாறு அவர் பேசினார்.

ஊர்வலம்

முன்னதாக வடகாடு கடை வீதியில் இருந்து மாரி யம்மன் கோவில் வரை இயற்கை யோடு இணைந்து வாழக்கோரி பெண்கள் ஊர்வலமாக சென் றனர்.

நிகழ்ச்சியின்போது மண் பரிசோதனை செய்யப்பட்ட வர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. ஒன்றிய கவுன்சிலர் சீனிவாசன், முன்னாள் கவுன்சிலர் ரெத்தி னம், முன்னாள் கூட்டுறவு சங்கத் தலைவர் தங்கவேல் மற்றும் வேளாண், வேளாண் பொறியியல், தோட்டக்கலை, பொதுப் பணித்துறை உள்ளிட்ட துறைகளை சேர்ந்த அலுவலர்கள் பேசினர். ஏராளமான விவசாயிகள் கலந்து கொண் டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடு களை வேளாண் உதவி அலு வலர்கள் செய்தனர்.

**தா.பழூரில் உழவர் பெருவிழா&அம்மா திட்ட முகாமில் 5 விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவிகள் 276 கால்நடைகளுக்கு சிகிச்சை**

தா.பழூர்,

தா.பழூர் ஒன்றியம் தா.பழூர் முதல் நிலை ஊராட்சியில் நடைபெற்ற உழவர் பெரு விழா மற்றும் அம்மா திட்ட முகாம் நடைபெற்றதில் திருந்திய நெல் சாகுபடி பயிர் செய்யும் விவசாயிகள் 5 பேருக்கு தலா ரூ.2ஆயிரம் வீதம் ஊக்கத்தொகை வழங்கப் பட்டது. 276 கால் நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

அம்மா திட்டமுகாம்

அரியலுÖர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியத்தில் தமிழக அரசின் சிறப்புத்திட்டமான உழவர் பெருவிழா மற்றும் அம்மா திட்ட முகாம் தா.பழூர் அரசினர் மேல் நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தா.பழூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் அண்ணாதுரை தலைமை வகித்தார். உதவி வேளாண் அலுவலர் ராஜா வரவேற்றார். ஊராட்சித் தலைவர் மஞ்சுகுமார் விழா வினை தொடங்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். உடையார் பாளை யம் ஆர்.டி.ஓ. கஸ்துÖரி, ஜெயங்கொண்டம் தாசில்தார் சீனிவாசன் ஆகியோர் முன் னிலை வகித்தனர். இந் நிகழ்ச் சியில் துணை வேளாண்மை அலுவலர் சுகந்தி திட்டம் குறித்து செய் முறை விளக்க மளித்தார். வேளாண் பொறியியல் துறை இளநிலை பொறியாளர் ரவிச் சந்திரன் ஆகியோர் திட்டங் கள் குறித்து பேசினர்.

5 பேருக்கு காசோலை

இந்நிகழ்ச்சியில் விவசாயி களுக்கு மண்மாதிரி எடுத்தல், எலி ஒழிப்பு செய்தல், கால் நடை முகாம், அசோலா வளர்ப்பு, மண்புழு வளர்ப்பு, தோட்டக்கலையில் குழி தட்டில் செடி வளர்ப்பு, விதை நேர்த்தி உள்ளிட்ட பல்வேறு அரசின் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு செய்முறை விளக்கம் காண்பிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியல் திருந்திய நெல் சாகுபடி பயிர் செய்யும் விவ சாயிகளுக்கு ஊக்கத்தொகை ரூ.2 ஆயிரம் மதிப்பில் 5 பேருக்கு காசோலை வழங்கப் பட்டது. மற்றும் மானிய விலையில் விசைத்தெளிப்பான் கருவி மற்றும் விவசாய இடு பொருட்கள் வழங்கப் பட்டது.

276 கால்நடைகளுக்கு சிகிச்சை

தொடாந்து அம்மா திட்ட முகாமில் பட்டா மாற்றம், முதியோர் ஓய்வூதியதொகை, குடும்ப அட்டையில் பெயர் திருத்தம் உள்ளிட்ட மனுக்க ளுக்கு தீர்வு அளிக்கப்பட்டது. மேலும் கால்நடைமருத்துவர் அறிவுச்செல்வன் தலைமை யில் நடைபெற்ற கால்நடை மருத்துவ முகாமில் குடற்புழு நீக்கம், சினைபரிசோதனை, நோய்தடுப்பூசி என 276 கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

கலந்து கொண்டவர்கள்

தோட்டக்கலை துறை உதவி வேளாண்மை அலவலர் தமிழ் மாறன், சாந்தி, செந்தில்குமார், துணை வேளாண்மை அலு வலர் சொக்கலிங்கம் ஆகியோர் மண்மாதிரி குறித்து செய்முறை விளக்கமளித்தனர். இந்நிகழ்ச்சியில் அட்மா திட்ட அலுவலர்கள் சகாதேவன், குமணன் ,உதவி வேளாண்மை அலுவலர்கள் ராஜா, சிவக் குமார், வேளாண் விற்பணை மற்றும் வணிக அலுவலர் குமாரபாண்டியன், செந்தில் குமார், ஜோதி மற்றும் வருவாய் ஆய்வாளர் துரை, கிராமநிர்வாக அதிகாரி சிவக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**காவிரி மேலாண்மைக்குழு அமைக்க வலியுறுத்தி விவசாயிகள் கையப்பமிட்ட தபால் அட்டை பிரதமருக்கு அனுப்பப்பட்டது**

கரூர்,

வேலாயுதம்பாளை யத்தில் காவிரி மேலாண்மை குழு அமைக்க விவசாயி கள் பிரதமருக்கு தபால் அட்டை அனுப்பும் இயக்கம் நடைபெற்றது.

தபால் அட்டையில் கையெழுத்து பெறும் இயக்கம்

காவிரி காப்புக்குழு மற்றும் புகழூர் தமிழ்சங்கம் சார்பில் காவிரி மேலாண்மை குழு அமைக்க கோரி விவசாயிகள் 1,000 பேரிடம் தபால் அட் டையில் கையெழுத்துபெறும் இயக்கம் வேலா யுதம்பாளை யம் தபால் நிலையம் முன்பு நடைபெற்றது.

காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு அரசிதழில் வெளி யிட்ட பிறகும், அந்த தீர்ப்பு கள்படி காவிரி மேலாண்மை வாரி யத்தை மத்திய அரசு அமைக்கவில்லை. அதனால் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு காத்திராமல் வாரியத்தை அமைக்க உடனடியாக நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த வாசகம் தட் டச்சு செய்த தபால் அட்டை யில் ஒவ்வொரு விவசாயிடம் கையெழுத்து பெறப்பட் டது.

பிரதமருக்கு கடிதம்

இந்த நிகழ்ச்சிக்கு காவிரி காப்புக்குழு துணை தலைவர் க.நாச்சிமுத்து தலைமை தாங்கினார். புகழூர் வட் டார வெற்றிலை விவசாயிகள் சங்கத் தலைவர் ராமசாமி முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் புகழூர் தமிழ் சங்க நிர்வாகிகள் கு.பழ னிச்சாமி, துரையரசன், ஆ.பழனிச்சாமி,, சுந்தரமூர்த்தி, வி.ஆர்.அண்ணாவேலு, மற் றும் பொன்னுசாமி, அக்ரி கனகசபை ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆயிரம் விவசாயிகள் கையெழுத்து பெற்று பிரதம ருக்கு தபால் அட்டை அனுப்பி வைக்கப்பட்டது.

**நிலத்தடி நீரை மேம்படுத்த பண்ணை குட்டைகள் அமைக்கும் பணியை விரைந்து முடிக்க வேண்டும் கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவு**

திண்டுக்கல்

நிலத்தடி நீரை மேம்படுத்த பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என்று கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

<u>கலெக்டர் ஆய்வு</u>

திண்டுக்கல் மாவட்டம் தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றியம் தொப்பம்பட்டி, கள்ளிமந்தையம், பொருளூர், மரிச்சிலம்பு ஆகிய இடங்களில் பசுமை வீடுகள் கட்டும் பணி நடந்து வருகிறது. இதேபோல் இந்திரா குடியிருப்பு திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படுகின்றன.

மேலும் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பணிகள் நடந்து வருகின்றன. இந்த பணிகளை, கலெக்டர் வெங்கடாசலம் திடீர் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:–

திண்டுக்கல் மாவட்டத்தில் 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் பசுமை வீடுகள் கட்டும் திட்டம், சாலை சீரமைப்பு, புதிதாக சாலை அமைத்தல், தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்ட பணிகள் நடந்து வருகின்றன. நிலத்தடி நீரை மேம்படுத்த பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணியும் நடக்கிறது.

கள்ளிமந்தையம் ஊராட்சியில் ரூ.4½ லட்சம் மதிப்பில் கிழக்குக்குளம், மேற்கு குளம் தண்ணீர் வரத்து வாய்க்கால் சீரமைக்கப்பட்டு வருகிறது. ரூ.5 லட்சம் மதிப்பில், ஈஸ்வரன் கோவில் சுற்றுச்சுவர் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கள்ளிமந்தையத்தில் 4 பசுமை வீடுகள் கட்டப்பட்டு வருகிறது.

சாலை அமைக்கும் பணி

பொருளூர் கிராமத்தில் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூ.4 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் ஆலமரத்துப்பட்டி பிரிவில் இருந்து தீர்த்தகவுண்டன்வலசு ரோடு வரை கால்வாய் சீரமைக்கப்படுகிறது.

மரிச்சிலம்பில் ரூ.10 லட்சத்து 80 ஆயிரம் மதிப்பில் 6 பசுமை வீடுகளும், இந்திரா குடியிருப்பு திட்டத்தின் கீழ் ரூ.8 லட்சம் மதிப்பில் 8 வீடுகளும் கட்டப்படுகிறது. மரிச்சிலம்பு கிராமத்தில் சுகாதார வளாகம் கட்டும் பணி ரூ.5 லட்சத்து 67 ஆயிரம் மதிப்பில் நடைபெறுகிறது.

மேலும் அந்த ஊராட்சியில் 1.6 கிலோமீட்டர் தூரத்துக்கு ரூ.22 லட்சத்து 74 ஆயிரம் மதிப்பில் மரிச்சிலம்பு முதல் மாரிகவுண்டபுரம் வரை ஜல்லி பரப்பி சாலை அமைக்கும் பணி நடக்கிறது. பூலாம்பட்டியில் இருந்து அமரபூண்டி வரை தார்சாலை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது. இதுபோன்ற ஆய்வு பணிகளை முற்றிலும் செம்மையாக முடித்திட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாகரை, பூலாம்பட்டியில் நீர் உந்து நிலையங்கள், பண்ணைக்குட்டைகள் கட்டும் பணிகள் நடந்து வருகிறது. இந்த பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர்கள் விரைந்து முடிக்க வேண்டும்.

இவ்வாறு கலெக்டர் வெங்கடாசலம் கூறினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊராட்சி தலைவர் பிரித்தியாதேவி அப்பன், தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரிய செயற்பொறியாளர்கள் ராஜேந்திரன், ஜெர்மன்சுந்தரம், வெங்கடேசன், தொப்பம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் சாந்தகுமார், உதவி பொறியாளர்கள் முத்துக்குமார், கோகுல், தாசில்தார் விஜயலெட்சுமி ஆகியோர் உடனிருந்தனர்.

**கிணறுகளில் தண்ணீர் இல்லை: தோட்டப்பயிர் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது மத்திய நிபுணர் குழுவிடம் விவசாயிகள் வேதனை**

பேரையூர்

கிணறுகளிலும் தண்ணீர் இல்லாமல் போனதால் தோட்டப்பயிர் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக வறட்சி பகுதிகளை ஆய்வு செய்ய வந்த மத்திய நிபுணர் குழுவிடம் விவசாயிகள் கூறினர்.

<u>பருத்தி செடிகள்</u>

தமிழகத்தில் வறட்சி பாதித்த மாவட்டங்களுக்கு மத்திய அரசு ரூ.19 ஆயிரத்து 665 கோடி நிவாரணம் வழங்கவேண்டும் என்று தமிழக அரசு கோரிக்கை விடுத்தது. இதையடுத்து வறட்சி குறித்து ஆய்வு செய்வதற்காக மத்திய அரசு அதிகாரிகள் குழுவை அனுப்பி வைத்தது.

இந்த குழுவில் மத்திய அரசின் விவசாயத்துறை கூடுதல் செயலாளர் பிரவேஷ்சர்மா, குடிநீர் சுகாதாரத்துறை துணை செயலாளர் பாலசுப்பிரமணியன், ஊரக வளர்ச்சித்துறை இயக்குனர் தீரஜ் ககாடியா, கால்நடை பராமரிப்பு உதவி ஆணையர் கண்ணா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இவர்கள் நேற்று முன்தினம் மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் வறட்சிப்பகுதிகளை ஆய்வு செய்தனர். நேற்று விருதுநகர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஆய்வு பணிகளை மேற்கொண்டனர். பின்னர் அந்த குழுவினர் மதுரை மாவட்டம் கள்ளிக்குடி ஒன்றியம் மையிட்டான்பட்டி கிராமத்திற்கு வந்தனர். அங்கு மழை இல்லாமல் வாடிக்கிடந்த பருத்தி செடிகளை அவர்கள் பார்வையிட்டனர்.

<u>ரூ.8 கோடி இழப்பீடு</u>

பின்னர் விவசாயிகளிடம் தண்ணீரின் நிலை குறித்தும், விவசாயத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் கேட்டனர். அப்போது தண்ணீர் இல்லாமல் விவசாயத்தில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறினர். இதனை மாவட்ட கலெக்டர் அன்சுல் மிஸ்ரா

அதிகாரிகளிடம் விளக்கினார். பின்னர் மையிட்டான்பட்டியில் உள்ள கால்நடை மருத்துவமனையை அவர்கள் ஆய்வு செய்தனர்.

அதையடுத்து டி.கல்லுப்பட்டிக்கு சென்ற அதிகாரிகள் அங்கும் பாதிப்புகளை கணக்கிட்டதுடன், அது குறித்து விவசாயிகளிடமும், பொதுமக்களிடமும் கேட்டனர். அதன்படி திருமங்கலம் தாலுகாவில் நன்செய், மானாவாரி, தோட்டப்பயிர்கள் உள்பட 23 ஆயிரத்து 544 ஏக்கர் விவசாய நிலம் பாதிக்கப்பட்டு இருப்பதாக கணக்கிட்டு உள்ளதாகவும், விவசாயிகளுக்கு ரூ.8 கோடி இழப்பீடு வழங்க பரிந்துரை செய்யப்படும் என்றும் மாநில அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.

<u>கிணறு உள்ளது</u>

அதைத்தொடர்ந்து அவர்கள் சிலார்பட்டி கிராமத்திற்கு சென்றனர். அங்கு தோட்டப்பயிர் விவசாயத்தில் சம்பங்கி, மல்லிகை செடிகள் வாடிய நிலையில் காட்சி அளித்தது. அவற்றை பயிர் செய்திருந்த விவசாயிகள் சுந்தர்ராஜ், இளைய ஆழ்வார் ஆகியோரிடம் உங்களுக்கு கிணறு வசதி உள்ளதா? விவசாயத்திற்கு கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றுள்ளீர்களா? என்று அதிகாரிகள் கேள்வி எழுப்பினர். அப்போது விவசாயிகள் கூறியதாவது:–

கிணறு உள்ளது என்றாலும் அதில் தண்ணீர் இல்லை. கடந்த 1½ ஆண்டுக்கு முன்பு 3 மணி நேரம் வரை கிணற்றில் தண்ணீர் எடுக்கும் வசதி இருந்தது. தற்போது தண்ணீர் சிறிதளவும் இல்லை. மழையும இல்லை. தோட்டக்கலை பயிர்கள் மூலம் ஆண்டுக்கு ரூ.3 லட்சம் வரை வருமானம் கிடைக்கும். இந்த ஆண்டு அனைத்தையும் இழந்துவிட்டோம்.

<u>குடிநீர் தட்டுப்பாடு</u>

அதேபோல கரும்பு விவசாயமும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. சொந்த பணத்தை முதலீடு செய்து விவசாயம் செய்த நிலையில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே உரிய இழப்பீடு வழங்க வேண்டும். அத்துடன் வேலை இல்லாத நிலையில் தற்போது மத்திய அரசின் வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் பணி செய்யும் நிலை உள்ளது. விவசாயத்துக்கு வாங்கிய கடனுக்கு அதன் மூலமே வட்டி செலுத்தி வருகிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

அந்த பகுதியில் இருந்த பெண்கள், தங்கள் பகுதியில் குடிநீருக்கும் கடும் பிரச்சினை உள்ளதாக தெரிவித்தனர். அத்துடன் வறட்சியின் பாதிப்புக்கு உரிய நிவாரணம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார் குடிநீர் தட்டுப்பாட்டை போக்கவும், நிவாரண உதவி

விரைவில் கிடைக்கவும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலெக்டர் அன்சுல் மிஸ்ரா அவர்களிடம் கூறினார். பின்னர் அதிகாரிகள் குழுவினர் அங்கிருந்து புறப்பட்டு சென்னை சென்றனர்.

**சிவகங்கை மாவட்டத்தில் மத்திய அரசின் வறட்சி நிவாரண குழுவினர் ஆய்வு பாதிப்புகளை விவசாயிகளிடம் கேட்டறிந்தனர்**

சிவகங்கை,

சிவகங்கை மாவட்டத்தில் மத்திய அரசின் வறட்சி நிவாரண குழுவினர் நேற்று பார்வையிட்டு ஆய்வு நடத்தினர். பின் னர் வறட்சியினால் ஏற் பட்ட பாதிப்பு குறித்து அவர்கள் விவசாயி களிடம் கேட்டறிந்தனர்.

மத்திய நிவாரண குழு

தமிழகத்தில் நிலவும் வறட் சியை கணக்கிட மத்திய அர சின் அதிகாரிகள் கொண்ட வறட்சி நிவாரண குழு தமிழ கத்திற்கு வந்துள்ளது. 2குழுக் களாக இந்த குழுக்கள் பிரிந்து தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து தமிழ கத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி யின் பாதிப்பை நேரில் ஆய்வு செய்து வருகிறது.

மத்திய வேளாண் விற்பனை மைய சிறு விவசாயிகள் அமைப்பின் நிர்வாக இயக்கு நர் பிரவேஸ்சர்மா தலைமை யில் வந்த குழுவினர் சிவகங்கை மாவட்டத்தில் நேற்று சுற்றுப் பயணம் செய்தனர். இந்த குழுவில் திராஜ்காகாடியா, பாலசுப்பிரமணியன் மற்றும் ஹன்னா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இவர்களுடன் தமிழக அரசின் கூடுதல் செய லர் ஸ்ரீதர் மற்றும் நகராட்சி கால்நடைத்துறை, கூட் டுறவுத் துறை, ஊரகவளர்ச்சித் துறை, வேளாண்மைத்துறை உயர் அதிகாரிகளும் உடன் வந்த னர்.

மாவட்ட எல்லையான பூவந் தியில் இந்த குழுவினரை மாவட்ட கலெக்டர் ராஜா ராமன், கூடுதல் கலெக்டர் கிரண்குராலா ஆகியோர் வர வேற்று அழைத்து வந்தனர். இந்த குழுவினர் ஆலங்குளம் ஊராட்சி மகாசிவனேந்தல் கிராமத்தில் வறட்சியால் பாதிக் கப்பட்ட விவசாயிகளின் நிலங்களை பார்வையிட்ட னர்.

வறட்சியால் எவ்வளவு பாதிப்பு

அப்போது இந்த குழுவினர் விவசாயிகளிடம் எத்தனை ஏக்கரில் பயிர் செய்தனர், வறட்சியினால் எவ்வளவு பகுதி பாதிக்கப்பட்டுள்ளது. இந்த விவசாயிகளுக்கு மாநில அரசின் நிவாரண நிதி கிடைத் துள்ளதா அந்த நிதி எந்த முறையில் வழங்கப்பட் டுள் ளது என கேட்டறிந்த னர்.

பின்னர் விவசாயிகளின் வங்கி கணக்கு புத்தகத்தை வாங்கி அதில் நிவாரணநிதி வரவு வைக்கப்பட்டுள்ளதா என பார்வையிட்டனர். பின் னர் வறட்சி நிவாரண திட் டத்தில் பாண்டி என்ற விவ சாயி நிலத்தில் பண்ணை குட்டை அமைக்கப்படுவதை நேரில் சென்று பார்வையிட் டனர். பின்னர் சாத்தரன் கோட்டை யில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

தொடர்ந்து மல்லல் கிராமத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தை பார்வையிட்ட குழு வினர் அங்கிருந்த அதிகாரி யிடம் விவசாயிகளுக்கு எந்த முறையில் கடன் வழங் கப் பட்டுள்ளது. பயிர்கடன், நகை கடன் எவ்வளவு வழங்கப் பட் டுள்ளது என கேட்டறிந் தனர்.

தீவனபுல்

மேலும் அந்த கிராமத்தில் கால்நடை பராமரிப்பு துறை மூலம் அமைக்கபட்டிருந்த முகாமை பார்வையிட்ட குழு வினர் வறட்சியை சமா ளிக்க கால்நடைக்கு தேவையான பசும் தீவனபுல் வழங்க எடுக் கப்பட்ட நடவடிக்கைகளை கேட்டறிந்தனர். பின் னர் மானிய விலையில் தீவன புல்லை வெட்டும் இயந்திரம் வழங்குவதையும், அந்த இயந்திரம் மூலம் வெட்டப் பட்ட புல்லை மாடுகள் சாப் பிடுவதையும் பார்வையிட்ட னர். இதன் பின்னர் செம் பனூர் கிராமத்திற்கு சென்ற வறட்சி நிவாரண குழுவினர் அங்கு நடைபெற்ற உழவர் பெருவிழாவில் கலந்து கொண் டனர். அத்துடன் அங்கிருந்த விவசாயிகளிடம் வறட்சியால் ஏற்பட்ட பாதிப்பு, குடிநீர் தட்டுப்பாடு அதை சரி செய்ய எடுக்க வேண்டிய நடவடிக் கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தனர். இதைபோல் இந்த குழுவினர் அதே கிராமத்தில் மகளிர் சுய உதவிகுழுவினரிடம் குறைகள் குறித்து கேட்டறிந்தனர். பின்னர் இந்த குழுவினர் ராம நாதபுரம் மாவட்டத்திற்கு புறப்பட்டு சென்றனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அதிகாரி தனபால், சிவகங்கை கோட்டாட்சியர் மலையாளம், வோண்மை இணை இயக்குநர் செல்லத் துரை, கால்நடை பாராமரிப்பு துறை இணை இயக்குநர் பாலகிருஷ்ணன், யூனியன் தலைவர்கள் செந்தில்நாதன், பாஸ்கரன், ஆரோக்கியம் மற் றும் அதிகாரிகன் உடன் சென் றனர்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூடுதல் நிவாரணம் வழங்க வேண்டும் மத்திய குழுவினரிடம், காங்கிரஸ், விவசாயிகள் சங்கத்தினர் மனு**

சிவகங்கை,

வறட்சியால் பாதிக் கப்பட்ட அனைத்து விவ சாயிகளுக்கும்கூடு தலாக நிவாரண நிதி வழங்க வேண்டும் என்று மத்திய வறட்சி நிவாரண குழுவினரிடம் காங்கிரஸ் மற்றும் விவ சாயிகள் சங்கம் சார் பில் கோரிக்கை மனு கொடுக் கபட்டது.

அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் சிவகங்கை மாவட்டத்திற்கு வறட்சியை பார்வையிட வந்த மத்திய குழுவினரிடம் மாவட்ட காங்கிரஸ் தலைவர் ராஜ ரத்தினம், முன்னாள் எம். எல்.ஏக்கள் ராமசாமி, அருண கிரி ஆகியோர் தலைமையில் காங்கிரஸ் கட்சியினர் கோரிக்கை மனு ஒன்று கொடுத் தனர். அதில் அவர்கள் கூறியிருப்பதாவது:-

சிவகங்கை மாவட்டம் மழையை நம்பி விவசாயம் செய்கிற மாவட்டம் ஆகும். இந்தாண்டு பருவ மழை பொய்த்து போனதால் மாவட்ட முழுவதும் விவ சாயம் பொய்த்து நஷ்டம் ஏற் பட்டுள்ளது. எனவே மாவட் டத்தில் உள்ள அனைத்து வரு வாய் கிராமத்திற்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண் டும்.

இந்த மாவட்டத்தில் பெரும் பான்மையான விவசாயம் நெல், மிளகாய், கடலை ஆகும். பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் கிடைக்க சரியான முறையான களஆய்வு விவசாயத் துறை யால் செய்து கணக்கெடுக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு ரூ.25ஆயிரம் வரை வறட்சி நிவாரணம் வழங்கவேண் டும். இவ்வாறு அவர்கள் அந்த மனுவில் கூறியிருந்தனர்.

விவசாயிகள் சங்கம்

இதுபோல தமிழ்நாடு விவ சாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ஆதிமூலம் கொடுத்த மனுவில் கூறியுள்ள தாவது:-

சிவகங்கை மாவட்டத்தில் இந்தாண்டு 2 லட்சம் ஏக்கரில் நெல், மிளகாய், கரும்பு, வாழை, தென்னை, பயிறு வகைகள், எண்ணெய் வித்துக் கள் பயிரிடப்பட்டது. போதிய மழையின்மையாலும், மின் தடையாலும் நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததாலும் விவ சா யிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

எனவே தற்போது மாநில அரசு வழங்கி உள்ள ரூ.5ஆயி ரம் போதுமானதாக இல்லை. கடும் குடிநீர் தட்டுப்பாடும் நிலவுகிறது. எனவே மத்திய அரசு கூடுதல் வறட்சி நிவா ரண நிதி வழங்க வேண்டும். காவிரி, வைகை, குண்டாறு ஆகிய 3நதிகளை இணைக்க நிதி வழங்க வேண்டும்.

சோலார் மின்விளக்கு, ஆழ் குழாய் கிணறு மற்றும் பம்பு செட்டுகள் அமைக்க மானியம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர் அந்த மனுவில் கூறியி ருந்தார்.

100சதவீத இன்சூரன்ஸ்

இதுபோல தமிழ்நாடு விவ சாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் குணசேகரன் எம். எல்.ஏ, மாவட்ட தலைவர் கலையரசன் ஆகியோர் கொடுத்த மனுவில் கூறியுள்ள தாவது:-

இன்ஸ்சூரன்ஸ் திட்டத்தில் பதிவு செய்த அனைத்து விவ சாயிகளுக்கும் 100 சதவீதம் இன்ஸ்சூரன்ஸ் வழங்க வேண்டும். நன்செய் நிலத்திற்கு ஏக்கருக்கு ரூ.15ஆயிரமும், புன்செய் நிலத்திற்கு ரூ.10 ஆயிரமும் தரவேண்டும். மிளகாய் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.25ஆயிரம் வழங்க வேண் டும். பண்ணை குட்டைகள் வெட்ட கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். கண் மாய்களில் மடைக்கு ஒரு ஆழ்குழாய் கிணறு அமைக்க வேண்டும். கூட்டுறவு கடன்களை ரத்து செய்ய வேண்டும் உள்பட பல கோரிக்கைகள் அந்த மனுவில் இடம் பெற்றிருந்தது.

இதுபோல் மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சி சார்பில் அதன் மாவட்ட செயலாளர் கந்த சாமி கொடுத்த மனுவில், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூடுதல் நிவாரண நிதி வழங்க வேண் டும். குடிநீர் தட்டுப்பாட்டை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியினால் வேலை தேடி வெளியிடங் களுக்கு செல்வதை தடுக்க வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் உள்ளிட்ட பல் வேறு கோரிக்கைள் அந்த மனுவில் இடம் பெற்றிருந்தன. இதை தவிர அந்த பகுதி விவ சாயிகள் சார்பில் வறட்சிக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும். குடிநீர் பிரச்சினை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 100நாட்கள் தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் 200 நாட்களுக்கு வேலை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.14¾ கோடி நிவாரணம் கலெக்டர் சி.சமயமூர்த்தி தகவல்**

நெல்லை

நெல்லை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ரூ.14¾ கோடி நிவாரணம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் சி.சமயமூர்த்தி கூறியுள்ளார்.

<u>ரூ.14¾ கோடி</u>

தமிழகத்தில் டெல்டா அல்லாத மாவட்டங்களில் வறட்சியின் காரணமாக 50 சதவீதத்துக்கு மேல் பயிர் சேதமடைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது.

நெல்லை மாவட்டத்தில் 50 சதவீதத்துக்கு மேல் பயிர் சேதத்தால் பாதிக்கப்பட்ட 31 ஆயிரத்து 706 விவசாயிகளுக்கு 41 ஆயிரத்து 904 ஏக்கர் நெல் பாதிக்கப்பட்டது. நெல் மற்றும் இதர பயிர்களுக்கும் சேர்த்து ரூ.14 கோடியே 87 லட்சத்து 87 ஆயிரத்து 858 நிவாரணத் தொகை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்க அரசு அனுமதி அளித்து உள்ளது. இந்த தொகை நெல்லை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டு உள்ளது.

இந்த தொகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாகவும் இதர வங்கிகள் மூலமாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுடைய வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்பட உள்ளது. வங்கி கணக்கு இல்லாத விவசாயிகள் அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் செயலாளரை தொடர்பு கொண்டு கணக்கு தொடக்க வேண்டும் என கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

<u>வங்கி கணக்கு</u>

வங்கி கணக்கு இல்லாத விவசாயிகள் தங்களது பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் தங்களது பெயரில் புகைப்படம், இருப்பிட சான்றிதழ் மற்றும் உரிய ஆவணங்களுடன் சென்று வங்கி கணக்கு தொடங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இந்த தகவலை நெல்லை மாவட்ட கலெக்டர் சி.சமயமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**குமரி மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.3¼ லட்சம் மானியத்தில் சோலார் பம்புகள் வேளாண்மை இணை இயக்குனர் தகவல்**

நாகர்கோவில்

குமரி மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.3¼ லட்சம் மானியத்தில் சோலார் பம்புகள் வழங்கப்பட இருப்பதாக வேளாண்மை இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

குமரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சையது அகமது மிராஞ்சி வெளியிட்டுள்ள ஒரு அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

<u>ரூ.80 ஆயிரம் செலுத்தினால் போதும்</u>

விவசாயிகள் மின்சாரத்தில் இயங்கும் பம்புக்கு மாற்றாக சூரிய சக்தியால் இயங்கும் சோலார் பம்புகளை பயன்படுத்தலாம். இதை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு சோலார் பம்புகளுக்கு மானியம் அறிவித்து உள்ளது. குமரி மாவட்டத்துக்கு பொது இனத்தின் கீழ் 4 பம்புகளும், ஆதி திராவிடர் இனத்தின் கீழ் ஒரு பம்பும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

5 குதிரைசக்தி திறன் கொண்ட பம்ப் நிறுவ ரூ.4 லட்சம் செலவு ஆகும். இந்த தொகையில் ரூ.3 லட்சத்து 20 ஆயிரம் மானியமாக வழங்கப்படும். விவசாயிகள் ரூ.80 ஆயிரம் மட்டும் செலுத்தினால் போதும்.

இவ்வாறு பெறப்படும் பம்புகளுக்கு 5 ஆண்டுகள் இலவச பராமரிப்பு மேற்கொள்ளப்படும்.

அட்வான்ஸ் ரூ.10 ஆயிரம்

எனவே, விருப்பம் உள்ள விவசாயிகள் தங்களது பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி, திரும்பப் பெற முடியாத முன்பணத்தொகை ரூ.10 ஆயிரத்தை அரசுக்கு செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு அந்த அறிவிப்பில் கூறப்பட்டு உள்ளது.

தினகரன்

**செலவில் பாதி அரசு மானியம் கால்நடைத் தீவனம் பற்றாக்குறை போக்க தி1.29 கோடியில் திட்டம்**

ஈரோடு, : வறட்சியினால் கால்நடைத் தீவன பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் ஈரோடு மாவட்டத்தில் ரூ.1.29 கோடி செலவில் புதிய திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளதாக கலெக்டர் சண்முகம் கூறினார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது: தற்போது நிலவி வரும் வறட்சியினால் கால்நடைகளுக்கு ஏற்பட்டுள்ள தீவன பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் முதலமைச்சரின் உத்தரவின் பேரில் ஈரோடு மாவட்டத்தில் ரூ.1.29 கோடி செலவில் அமல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் குறுகிய காலத்தில் குறைந்த பாசன வசதியில் அதிக அறுவடை கிடைக்கக்கூடிய தீவன சோளத்தினை விவசாயிகள் நிலத்தில் பயிரிட்டு பயன்பெற முடியும். ஒரு ஏக்கர் பரப்பளவில் தீவனசோளம் உற்பத்தி செய்ய நடைமுறை செலவு ரூ.13 ஆயிரத்து 600 ஆகும். இதில் 50 சதவீதம் அரசு மானியமாக அதாவது ஒரு ஏக்கருக்கு ரூ.6 ஆயிரத்து 800 வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்படும். தீவன சோளத்தினை விவசாயிகள் கால்நடைகளுக்கு பசுந்தீவனமாகவும் அல்லது உலர வைத்து சோளத்தட்டாகவும் வழங்கலாம். விதைத்த 60 நாட்களில் ஒரு ஏக்கருக்கு 10 டன் பசுந்தீவனமாக அறுவடை செய்யலாம். உலர வைத்து பயன்படுத்தினால் ஒரு ஏக்கர்க்கு 2 டன் உற்பத்தி செய்யலாம்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள மூன்றரை லட்சம் கால்நடைகளுக்கு வறட்சி காலத்தில் தீவனம் கிடைக்கும் வகையில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. இதே போல பயிரிடப்படும் சோளதட்டை பசுந்தீவனமாகவோ அல்லது உலர் தீவனமாகவோ அரசே பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக கொள்முதல் செய்து தங்களது உறுப்பினர்களுக்கு 50 சதவீத மானியத்தில் வழங்கிடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே ஈரோடு மாவட்டத்தில் சிறிதளவு தண்ணீர் பாசன வசதியுடன் குறைந்த பட்சம் அரை ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகள் அருகில் உள்ள கால்நடை மருந்தகங்களில் இம்மாதம் 15ம் தேதிக்குள் விண்ணப்பம் அளிக்கலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மத்திய நிபுணர் குழுவினர் அமராவதி பாசனத்தை ஆய்வு செய்ய கோரிக்கை**

தாராபுரம், : அமராவதி பழைய ஆயக்கட்டு பாசன சங்க தலைவர் கொளத்துப்பாளையம் விஸ்வநாதன் கூறியதாவது: அமராவதி பழைய, புதிய ஆயக்கட்டு பாசனத்தில் இந்த ஆண்டு

தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக நெல் சாகுபடி செய்ய முடியவில்லை. பரவலாக நெல் சாகுபடி துவங்கப்பட்டு நடவுப் பணி மட்டுமே முடிவடைந்த நிலையில், தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக பயிர் காய்ந்து விட்டது.அமராவதி நீர்பாசனத்திட்டத்தில் 11,893 ஹெக்டேர் பழைய ஆயக்கட்டு, 8,875 புதிய ஆயக்கட்டு, 4,605 ஹெக்டேர் நீரேற்றுப் பசானம் என இருந்து வந்தது. மற்ற பகுதிகளைப் போல 3 போக சாகுபடி செய்ய முடியவில்லை. ஆண்டு தோறும் ஏற்படும் தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக ஒரு போக சாகுபடி மட்டுமே செய்யப்பட்டு வந்தது.

இந்த ஆண்டு மழை இல்லாத காரணத்தால் ஒரு போக நெல் சாகுபடியும் செய்ய முடியவில்லை, இதனால் சிறு, குறு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மழையை நம்பி நடவுப்பணி மேற்கொண்டு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வரையில் செலவு செய்து, தண்ணீர் பற்றாக்குறையால் நடவுப்பயிர்கள் காய்ந்து போனதால் நஷ்டம் அடைந்து விட்டனர். வறுமையின் பிடியில் சிக்கித்தவிக்கும் அமரவாதி பாசன விவசாயிகள், தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தமிழக அரசு சென்னையை தவிர 31 மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, வறட்சி நிவாரணம் வழங்கி வருகிறது. இந்த நிவாரணத் தொகை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு போதுமானதாக இல்லை. மத்திய அரசு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். அமராவதி பாசன விவசாயிகளுக்கு மற்ற பாசன விவசாயிகள் போல் அரசு உதவியோ, உலக வங்கி திட்ட உதவிகளோ இதுவரையில் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர். எனவே மத்திய அரசின் நிபுணர் குழு அமராவதி பழை, புதிய ஆயக்கட்டு பாசன விவசாயிகளை நேரில் சந்தித்து, ஆய்வு மேற்கொள்ள வேண்டும். பாரபட்சமின்றி உடனடியாக நிவாரணம்வழங்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**திருப்பூர் மார்க்கெட்டில் குண்டு மல்லி விலை சரிவு**

திருப்பூர், முகூர்த்தம் உள்ளிட்ட விஷேச தினங்கள் எதுவும் இல்லாததால் திருப்பூரில் பூக்களின் விலை கடும் சரிவை சந்தித்துள்ளது. கிலோ ரூ.240 ரூபாய் வரை விற்ற மல்லிகை பூ நேற்று ரூ.80க்கு விற்பனையானது. திருப்பூர் ஈஸ்வரன் கோயில் வீதியில் பூ மார்கெட் மொத்த வியாபாரக்கடைகள் அமைந்துள்ளன. ஊட்டி,« மட்டுப்பாளையம், ஒசூர், பெங்களூர் ஆகிய இடங்களில் இருந்து ரோஸ், பட்டன் ரோஸ் பூக்களும், சத்தியமங்கலம், நிலக்கோட்டை ஆகிய பகுதிகளிலிருந்து மல்லி, முல்லை, கனகாம்பரம், செவ்வந்தி, கோழிகொண்டை, சம்பங்கி, அரளி ஆகியவை விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது.நாளொன்றுக்கு ஒன்றரை டன் பூக்கள் திருப்பூருக்கு விற்பனைக்கு வருகிறது. கடந்த 6 நாட்களாகவே பூக்களின் விலை தொடர் சரிவை சந்தித்து வருகிறது. காலையில் கிலோ 80 ரூபாய்க்கு விற்ற குண்டு மல்லி மாலை 60 ரூபாய்க்கு விற்பனையானது. பூக்கள் விலை சரிவினால் வியாபாரிகள் கவலையடைந் துள்ளனர். இது குறித்து வியாபாரி பாலன் கூறுகையில், சித்திரை முதல் நாள் பண்டிகையை முன்னிட்டு பூக்களின் தேவை அதிகரித்து விலையும் அதிகரித்தது. தற்போது வெயில் காலம் என்பதால் பூக்களின் உற்பத்தி அதிகரித்துள்ளது. ஆனால் விஷேச நாட்கள், பண்டிகைகள் எதுவும் இல்லாததால் பூக்கள் வாங்கும் மக்களின் எண்ணிக்கை குறைந்து விலையும் சரிந்துள்ளது. குண்டு மல்லி பூ கிலோ 160 ரூபாய்க்கு கீழே வந்ததில்லை. ஆனால் தற்போது ரூ.80க்குதான் விற்பனையாகிறது. இன்று (நேற்று) மல்லி கிலோ ரூ.80, முல்லை ரூ.140, கனகாம்பரம் ரூ.180, அரளி கிலோ ரூ.60 என விற்பனையானது. வைகாசி முகூர்த்தம் துவங்கினால் விற்பனை அதிகரிக்க வாய்ப்புள்ளது' என்றார்.